# தலைமுறைகளை ஒருமைப்படுத்துதல்

## 40-நாள் உபவாசம் & ஜெபம்

### 8 ஆகஸ்ட் - 16 செப்டம்பர்



உங்கள் வேதாகமத்தோடு இந்த புத்தகத்தை பயன்படுத்திட வேண்டும். எல்லா ஜெப குறிப்புகளும் வழிகாட்டியாக மட்டுமே செயல்படுகிறது. இந்த 40 நாள் உபவாசம் மற்றும் ஜெபத்தில் பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்துவாராக!

“இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்”

(மல்கியா 4:5-6)

# அறிமுகம் & முன்னுரை




தேசத்திற்காக தலைமுறையினரை ஒருமனப்படுத்துதல்.! இது தான் இவ்வருடத்திற்கான 40 நாள் உபவாச ஜெபத்தின் கருப்பொருள். நமது 40 நாள் உபவாச ஜெபம் என்இசிஎப் மலேசியாவின் 10 ஆண்டுகள் நிறைவை குறிக்கிறது. இந்த நிகழ்ச்சி என்இசிஎப் வருடாந்திர காலண்டரில் எப்பொழுதும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இருக்கிறது. ஆனாலும், இந்த வருடம் ஒரு மாற்றம் உண்டு - வழக்கமாக ஜுலை 22 தொடங்கும் நிகழ்ச்சி, 8 ஆகஸ்டில் தொடங்கும் முழு தேசமும் ஒன் மலேசியா நாளை கொண்டாடும் 16 செப்டம்பரில் முடிவடையும்.

சமீப காலத்தில் இளைய தலைமுறையினர் இருக்கிற தலைமைத்துவத்திடமிருந்து பொறுப்புகளை எடுத்துக் கொள்ள எழும்பாமல் இருப்பதை குறித்து கவலைக்குரியதாயிருக்கிறது. "தலைமுறை பிரிவு" என்பது தேசிய சபையின் மொத்த தலைமைத்துவத்தை பலவீனப்படுத்தியுள்ளதை காட்டுகிறது. நமது நாட்களில் கலப்பட தலைமுறை சபை ஊழியம் மற்றும் தலைமைத்துவம் என்பது இல்லாத ஓர் காரியம் வயதாகி கொண்டிருக்கும் திருச்சபைகளில் எங்கும் அதிக வாலிபர்களை கொண்டிருக்க விருப்பம் கொண்டிருக்கின்றனர். துரதிஷ்ட நிலையில், அவர்களை நம் சபைக்கும் கவர்ந்திழுக்க செய்யும் முயற்சிகள் போதவில்லை. ஏதோ ஒன்று சரியில்லையே? அப்படியானால், மூத்த தலைமுறையினர் தங்கள் விசுவாசத்தை அர்த்தமுள்ளதாய், உண்மைத்துவத்துடன், இளைய தலைமுறையினருக்கு கொடுக்கும் நேரம் வந்து விட்டது.

இந்த செயல்முறையை சிந்திக்கும்போது, மூன்று முக்கிய காரியங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

1. இளையோரும், முதியோரும் சேர்ந்து ஊழியம் செய்யும்போது, உறவு கட்டப்படும். அது நடக்கும்போது, அங்கே கட்டுப்பாடு அல்லது யார் பொறுப்பில் இருக்கிறார் என்கிற கேள்விக்கு இடமில்லை.

2. பிரச்சனைகளை நல்ல விதத்தில் கையாள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பிரச்சனை மட்டுமே நம்மை அலைகழிப்புக்குள் எடுத்துச் சென்று, இறுதியாக அர்த்தமுள்ள ஈடுப்பாட்டை கொண்டு வரும்.

3. தேவனானவர் எல்லா தலைமுறையினருக்கும் தேவன். தேவனுடைய திட்டம் 30 வருடமாய் இயங்கக்கூடிய ஒரே தலைமுறைக்கானது அல்ல. அவருடைய வாஞ்சை எல்லா தலைமுறையும் அதனுடைய தனித்தன்மையுடன் சபை நன்மை மற்றும் அவருடைய ராஜ்ய விரிவுக்காக எழும்ப வேண்டும்.

யாத்திராகமம் 17ல் எப்படி மூன்று தலைமுறையினர் ஒற்றுமையாக இருந்து அமலேக்கியர்களை தோற்கடித்தார்கள் என்று எழுதப்பட்டள்ளது. மோசே யோசுவாவிடம் சிலரை தெரிந்து கொண்டு யுத்தம் பண்ணச் சொல்லிவிட்டு அவன் மலையுச்சியில் அவர்களுக்காக ஜெபித்து கொண்டிருந்தான். மோசேயின் ஜெப உதவி, ஆரோன் மற்றும் ஊருடைய உதவி யோசுவாவை உற்சாகப்படுத்தி செயல்படுத்தியது. அதேபோல தேவன் தங்கள் பட்சத்தில் இருந்து எதிரிகளை தேற்கடிப்பார் என்பதை மலேசிய திருச்சபைகள் அறியவேண்டும். எல்லா தலைமுறையினரும் உற்சாகப்பட்டு, முன்னிருக்கும் பணிகளை செய்ய ஒருவரையொருவர் ஆசீர்வதிக்க வேண்டும்.

நாம் சுயநலமான மற்றும் சாத்தானின் கீழ் பாதிக்கப்பட்டுள்ள உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குடும்பங்கள் அழிக்கப்பட்டு, உடைக்கப்படுகிறது. நமக்கொல்லாருக்கும் ஒரே எதிரி இருக்கிறான். மற்றும் இது நம்மை இணைத்து ஒரே தரிசனத்தில், ஒரே நோக்கத்தில் ஒன்று சேர்க்க வேண்டும். ஒவ்வொரு தலைமுறையையும் தனியாக சண்டையிட முடியாது நாம் ஒவ்வொரு தலைமுறையையும் கனப்படுத்தி, ஒன்றாக நம் சமூதாயத்திலும் தேசத்திலும் மாற்றத்தை கொண்டு வர வேண்டும். இது செயல்படுத்தப்படவில்லை என்பது தெளிவாக இருக்கிறது. இது மனந்திரும்புதல் மன்னிப்பு, சரிசெய்தலுக்கான அழைப்பு நாம் கண்ட தோல்விகள், அனுபவித்த பிரச்சனைகளை பின்தள்ளிவிட்டு, லட்சியத்தை நோக்கி ஓட வேண்டும். இந்த தேசத்தின் நன்மைக்காக ஒவ்வொரு தலைமுறையினரின் தனித்துவத்தை கண்டு கொண்டு, தேவன் கொடுத்த பங்கை அவர்கள் செயலாற்ற வேண்டும். இதற்காக நாம் தலைமுறையினரை ஆற்றி, கட்டி தேசத்திற்காக ஒருமனப்படுத்த வேண்டும்.

இந்த 10வது புத்தகம், உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் மற்றும் மற்றவர்களையும், உற்சாகப்படுத்தி, உபவாசித்து ஜெபிக்கவும் அதன் மூலம் தலைமுறையினர் கட்டப்பட்டு, அவருடைய பெரிய நாமத்தின் மகிமைக்கென்று ஆற்றப்படட்டும்.

*சாமுவேல் அங் பொதுச் செயலாளர், என்இசிஎப் மலேசியா!*

# குடும்பம் – குடும்பங்களுக்கான தேவ தரிசனம்

ஒரு பெலனுள்ள குடும்பம், ஒரு நல்ல தேசத்தை உருவாக்கும் என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. இந்த அறிக்கை மறுக்கப்படாத பட்சத்தில், நவீன மேற்கத்தியத்தில் தனி நபர்கள் ஒன்று கூடுவதே சமூதாயத்தின் அடிப்படை அமைப்பு என கருதப்படுகிறது. இது தேவனுடைய நோக்கத்திற்கு புறம்பானது. தேவனுடைய நோக்கம் குடும்பங்களை சார்ந்தது மற்றும் குடும்ப பிரிவு என்பது சிருஷ்டிப்புக்கான அடிப்படை அமைப்பு. அப்படியானால் தேவனுடைய பார்வையில், மக்கள் தனித்திருக்கும் தனி நபர்கள் அல்ல, ஆனால் அவர்கள் ஒன்றாக ஒரு குடும்ப பிரிவாக, வீடுகள் மற்றும் சமூதாயத்திலும் இருக்கிறார்கள். அவைகள் இரண்டும் ஒரு நல்ல தேசத்திற்கான அடித்தளமும், தூணாகவும் இருக்கின்றன.

குடும்ப பிரிவு என்பது தேவனுடைய உடன்படிக்கை நோக்கத்தின் மையமாகவும் இருக்கிறது. தேவன் பூமியிலுள்ள குடும்பங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கும்படி சித்தம் கொண்டிருக்கிறார் என ஆதியாகமம் 12:3 சொல்கிறது. குடும்ப பிரிவு என்பது முதல் அடிப்படை மனித அமைப்பாக இருப்பதால், இரட்சிப்பு குடும்பங்கள் மேல் வருகிறது. குடும்பங்கள் மூலம் தனிநபர்கள் மற்றும் சமூதாயங்கள் இரட்சிக்கப்படும். அதே போல, குடும்ப பிரிவு உடைந்து, நன்னெறி, மற்றும் ஆவிக்குரிய அழிவை அனுபவித்தால், இது சமூதாய வாழ்வையும், தேசத்தையும் பாதிக்கும்.

இதை கருத்தில் கொண்டு, நன்னெறி கடமை மற்றும் குடும்ப பிரிவின் நலனை பாதுகாக்க வேண்டும். ஒரு நல்ல அமைதலான திருமண தம்பதியர் உறவு, நல்ல பெற்றோர் பிள்ளை உறவு வேண்டும். இந்த உறவுகள் சட்டத்தின்படியோ அல்லது ஒழுக்கக் கேட்டின் மூலம் பாழடைய கூடாது. இது இயேசு கிறிஸ்து நமக்கு கர்த்தரும், நம் வாழ்வின் எஜமானராக இருக்கிறார் என்கிற தெய்வீக பொறுப்பை காட்டுகிறது. இதனால் தான் வசனங்கள் கணவன் - மனைவி - பெற்றோர் - பிள்ளையின் பொறுப்பை எடுத்துரைக்கின்றன. அதில் எப்போதும் கர்த்தருக்காக அல்லது கர்ததருக்குள் என அறிவுறுத்துகிறது.

எபே 5:22-6:9 பவுல் குடும்பத்திலுள்ள எல்லோரையும் தங்கள் பங்கை செய்ய அறிவுரை சொல்கிறார். கணவன், மனைவி, பிள்ளைகள் சபையின் ஒற்றுமை நிமித்தம் அவ்வாறு செய்ய சொல்கிறார். குடும்பத்திலுள்ள எல்லோரும் தங்கள் பங்கை நிறைவேற்றி, ஒருவரையொருவர் கனப்படுத்தினால், ஆவிக்குரிய மாற்றம் ஏற்படும். இந்த மாற்றம் விசுவாசிகள் ஆண்டவருடைய வல்லமையால் மாற்றப்பட்டு உலகிற்கு சாட்சிகளாக ஏற்படுத்தி, குடும்ப அமைப்பிற்குள் வாழ வைத்து செயலாற்ற வைக்கும். விஷேசமாக, இந்த புத்தகத்திற்கு எல்லா வகையிலும் உதவியாற்றி, கட்டுரைகள், சாட்சிகள், மொழி பெயர்ப்பு மற்றும் பக்தி விருத்திக்காக இதை பயன்படுத்தும் அனைத்து விசுவாசிகளுக்காவும் நன்றி செலுத்துகிறோம். எல்லோரும் இந்த ஜெப புத்தகத்தின் வழி பயனடைந்து, தலைமுறையினரை இணைத்து முன்னேறி செல்ல நாங்கள் ஜெபிக்கிறோம்.

தேவன் நாமே நம்முடைய ஜெபங்களையும், ‘‘உபவாச ஜெபம் மூலம் தேசத்தை மாற்றுதல்’’ என்கிற நமது முயற்சிகளையும் ஆசீர்வதிப்பாராக.

*பதிப்பாசிரியர்கள்,*
*யுஜின் யாப் & லுக்கிரிஸ் லோ*

# தலைமுறை இடைவெளி; இது உண்மையானதா?

என் மகனும் நானும் பேசுவது குறைவு, எங்களுக்கு தலைமுறை இடைவெளி உள்ளது என ஒரு பெற்றோர் கூறினார். இக்கால வாலிபர்கள் வித்தியாசமாக காரியங்களை செய்கின்றனர். என்னால் அவர்களை புரிந்து கொள்ள முடியவில்லை என் போதகர் கூறினார். இந்த உணர்வுகள் முதியவர் மற்றும் இளைய தலைமுறையினருக்கும் வழக்கமாக உள்ளவைகள். முதியோர் எரிச்சலோடு அதை சொல்கிறார்கள். வாலிபர்களோ அதை அலட்சியமாக சொல்கிறார்கள். இந்த உரையாடல் நம் குடும்பம் மற்றும் சபையிலுள்ள தலைமுறை இடைவெளியை எடுத்துக்காட்டுகிறதா? சிலர் “ஆம்” என்றும், மற்றவர்கள் “இல்லை” என்றும் கூறுவார்கள். ஏன் இம்மாதிரியான உணர்வுகள் நம் அன்றாட வாழ்க்கையில் சகஜமாக நடைபெறுகிறது என நம்மால் உணர முடிகிறதா?

வெவ்றோன சமூக கலாச்சார வடிவங்கள் தலைமுறை இடைவெளி பிரிவுக்கு காரணமாக அமைந்துள்ளதை பார்க்கப் போகிறோம்.

“பூஸ்தர்” தலைமுறை 1927 முதல் 1945 ஆண்டுகளில் பிறந்தவர்களை குறிக்கிறது. அவர்கள் கடினமாக உழைப்பவர்கள். ஒரே சிந்தை மற்றும் எந்த வேலையையும் அல்லது கடினமாக கிறிஸ்துவை பின்பற்ற ஒப்புக் கொடுத்திருப்பார்கள். விடாமுயற்சி என்பது இந்த தலைமுறையின் குணாதிசயம். “பூமர்” தலைமுறை 1946 முதல் 1970களில் பிறந்தவர்களை குறிக்கிறது. நடைமுறை, தரம் மற்றும் உயர்ந்த லட்சியமுள்ளவர்களாய் காணலாம். அவர்கள் எதை செய்தாலும், மனநிறைவும், அர்த்தமும் மற்றும் கர்த்தருக்கு சேவை செய்ய வேண்டும் என்கிற குணாதிசயம் கொண்டவர்கள்.

“பஸ்தர்” அல்லது “Gen -Y” என்பவர்கள் 1980 முதல் 1990களில் பிறந்தவர்கள். இவர்கள் உடனடி தொலை தொடர்பு சாதனங்களான இணையம், இமெயில், வெப்சைட் Youtube, Facebook, Myspace, Twitter போன்றவைகளுக்கு அறிமுகமானவர்கள். இந்த தலைமுறை அதிகமாக தீவிரம் மற்றும் முந்தைய தலைமுறையை காட்டிலும் கலாச்சாரப்படி சகிப்புத் தன்மையுள்ளவர்கள்.

**“பூஸ்தர்” தலைமுறை 1927 முதல் 1945 ஆண்டுகளில் பிறந்தவர்களை குறிக்கிறது.**

இந்த வித்தியாசமான குணாதிசயங்களோடு, தலைமுறைகள் இணைந்து செயலாற்ற செய்ய கூடுமா? உதாரணமாக “பஸ்தர்” தலைமுறையினர் “பூஸ்தர்” தலைமுறையினரை கண்டிப்பு, ஒழுங்கு, கடினமான மற்றும் தரமானவர்கள் என காண்கின்றனர். மாற்றங்களுக்கு விட்டுக் கொடுக்காதவர்கள். “பூமர்” தலைமுறையினரை “பூஸ்தர்”பாரம்பரியத்தை எதிர்ப்பவர்கள், சுயேச்சை மற்றும் மிஞ்சிய லட்சியங்களை உடையவர்களாக காண்கின்றனர். இம்மாதிரியான கணிப்புகள் உண்மையான வித்தியாசங்களாக இராமல், பெரும்பாலும் ஒருவருடைய சொந்த சமூக கலாச்சார அமைப்பின் சிந்தனையாக இருக்கும்.

ஒவ்வொரு தலைமுறையின் குணாதிசயங்களை குறித்த குறைவான புரிந்துணர்வே இந்த தலைமுறை இடைவெளிக்கு காரணமாக இருக்கிறது. இது ஒவ்வொரு தலைமுறையினரும் ஒருவரையொருவர் குறித்து கணித்து வைத்திருக்கும் தவறான காரியம். இது தலைமுறையினர் ஒன்றிணைந்து செயலாற்றுவதை தடுக்கும்.

மேலோயுள்ள ஆராய்ச்சி உண்மை என்றால், கேள்வி இது தான்; தலைமுறை இடைவெளி என்பது உண்மையா அல்லது அவர்களுடைய சொந்த தலைமுறையினரின் கலாச்சார வெறுப்பா? இங்கு தான் தலைமுறையினர் ஒருவருக்கொருவர் தாங்கள் கொண்டிருக்கும் கணிப்புகள் அறிந்து கொண்டு, சொந்த வெறுப்புகளையும், எண்ணங்களையும் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

நாம் ஜெபம் பண்ணி, நம்முடைய சொந்த தோல்விகளையும், வெறுப்புகளையும் கர்த்தர் வெளிப்படுத்தவும், நாம் எந்த தலைமுறையை சார்ந்தவர்கள் என்று அறிந்து, வெறுப்புகளுக்கு எதிராக செயலாற்றி, எல்லோருக்கும் வேதாகம கணிப்பின்படி ஆசீர்வாதமாக இருக்க வேண்டும்.

# தலைமுறையினரிடமிருந்து கேட்டறிதல்
# ஞானமாக தீர்மானியுங்கள்

வாலிபம் என்பது உற்சாகம் மற்றும் உணர்ச்சிகரமான ஒன்று. வாலிபத்தின் உற்சாகம் சில வேளைகளில் தேவனோடுள்ள நெருக்கத்தில் இடைவெளியை கொண்டு வரக்கூடும். நித்திய மதிப்பீடுகளை விட்டு, உலக சிற்றின்பங்களில் வாலிபரை கவனம் செலுத்த வைக்கலாம். வாலிபத்தின் முக்கிய சவால் "தீர்மானம்" என்ற வார்த்தை இன்றைக்கு வாலிபர்களுக்குரிய வாய்ப்புகளை இங்கே எழுதுவதற்கு அதிகமாக இருந்தாலும், இன்றைக்கு செய்யப்படும் தீர்மானங்களே, நாளைக்கு அவர்கள் எப்படிபட்ட ஆண் பெண்களாக இருப்பார்கள் என்பதை தீர்மானிக்கும்.

வடக்கடல் மெடித்திரேனியன் கடல், கருங்கடல் ஆகியவை உப்புத் தண்ணீர்கள் அடங்கிய கடல்கள் என்பதை நாம் அறிவோம். எல்லா மூன்று கடல்களும் நிலப்பரப்பில் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்களினால் பிரிந்து கிடப்பதை நாம் அறிவோம். ஒருவர் ஆல்ப்ஸ் மலையுச்சியில் ஏறினால் இதை காணலாம். இந்த மலையுச்சியிலிருந்து ஒரு பலகை துண்டை ஒரு திசையில் வீசினால் அது ரின் ஆற்றுக்குள் போய், மெடித்திரேனியனுக்கு போய்ச் சேரும். மற்றொரு பலகை துண்டை இரண்டாவது திசையில் வீசினால் அது ரோன் ஆற்றலுக்கு போய், வடக்கடலை அடையும், மூன்றாவது திசையில் ஒரு பலகை துண்டை வீசும்போது, அது டனுபி தண்ணீர்களில் வழி கருங்கடலை வந்தடையும். இது ஒரு தெளிவான செய்தி! உங்கள் வாலிப நாட்களில் நீங்கள் ஞானமாக தீர்மானம் செய்வது மிகவும் முக்கியம்.

நீங்கள் உங்கள் வாலிபத்தில் இருக்கும்போதே, உங்கள் பெலனையும், தாலந்துகளையும் தேவனுக்காக பயன்படுத்திட ஞானமாக தீர்மானிக்க வேண்டும். பலனற்ற செயல்கள் கொண்டு வரும் விடுபட முடியாத தவறான பழக்க வழக்கங்களில் அவைகளை வீணாக்காதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

புலம்பல் 12:1 நம் ஆத்துமாக்களுக்கு எச்சரிப்பு கொடுக்கிறது.
"நீ உன் வாலிபப்பிராயத்திலே என் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவகைளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்."

*மூப்பர் கோங் எங் பொங், என்இசிஎப் மலேசியா உதவி தலைவர்*

# தேசம் மாற்றமடைய தலைமுறையினரை ஒற்றுமைப்படுத்துதல்

"தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்" என சங்கீதம் 145:4 சொல்கிறது.

எந்த "தலைமுறையிலிருந்து" எந்த தலைமுறை அது ஒரு தலைமுறை சார்ந்ததல்லாமல் இரு தலைமுறையும் செய்ய வேண்டிய காரியமாக இருக்கிறது. சபை ஒற்றுமை; சபையிலுள்ள தலைமுறைகளின் ஒற்றுமையிலிருந்து ஆரம்பமாகிறது. நாம் பல்வேறு வயதினர் மத்தியில் ஊழியம் செய்யும்போது. நமது தேவன் தலைமுறைகளின் தேவன் என்பதை நாம் மறந்திட கூடாது.

கடந்த சில அண்மைய வருடங்களில் தலைமுறைகளின் ஒற்றுமையை காணக்கூடிய பாக்கியத்தை பெற்றேன் - (Baby Boomers, Gen - X, Gen - Y, Gen - Z அல்லது i - Gen) இந்த தலைமுறைகளுடன் சேவையாற்றி தேவ ராஜ்யத்தை விரிவாக்கி, தேசத்தை மாற்ற வேண்டும். எல்லா தலைமுறைகளையும் தேசம் மற்றும் சமூதாய மாற்றத்திற்கு நேராக வழிநடத்த வேண்டும். நமக்குள் இருக்கும் வேறுபாடுகள் மத்தியில், எல்லா தலைமுறைகளையும் ஒரே பொது நோக்கத்திற்காக ஒன்று சேர்க்கலாம்.

தலைமுறைகள் ஒன்று கூடி ஏழை எளியவர்களை சந்தித்து உதவி செய்யலாம், பிள்ளைகள் மற்றும் சமூதாயத்தில் இருக்கும் குடும்பங்களை கவனிக்கலாம், முதிய தலைமுறையினர் சமூதாய பெற்றோர்கள், குறிப்பாக தனித்து வாழும் பெற்றோர்கள், இளைய தலைமுறையினர் சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் மத்தியில் சேவையாற்றலாம். அதனுடைய நோக்கம் வறுமையை ஒழித்து, உடைந்த குடும்பங்களை சீர்ப்படுத்திட உதவி செய்தல். கையோடு கை கோர்த்து, இளையோரும் மற்றும் முதியோரும் ஒன்றாக சேவையாற்றி, சமூதாயத்திற்கு உதவி செய்ய வேண்டும்.

பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் சேர்ந்து எடுத்த மற்றொரு முயற்சி, அவர்களுக்கு இணையத்தள பகுதியை குறித்து கற்றுக் கொடுப்பது. தங்கள் பிள்ளைகள், மாணவர்களுக்கு ஆரோக்கியமான இணையத்தள காரியங்களை கற்றுக் கொடுப்பது. தற்போது நம் இளைஞர்கள் மத்தியில் இணையத்தள காரியங்கள் அதிகரித்துள்ளது. இணையத்தள உலகில் முதியோருக்கும், இளையோருக்கும் இடையே ஒரு பெரிய இடை வெளி பிரச்சனையாக உள்ளது.

## இந்த அனுபவங்கள் மூலம் நான் கற்றுக் கொண்டவைகள் :

**தாழ்மை-** தாழ்மையின் வல்லமை எப்படியாக தலைமுறையினர்கள் மத்தியிலிருக்கும் இடைவெளியை இணைத்துள்ளது என்பதை நான் கண்டிருக்கிறேன். "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கெல்லாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனதாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்..." (1 பேதுரு 5:5)

**ஆலோசனை -** நான் ஒரு Gen-X ஆக, இளையவர்கள் நம்மை, எப்பொழுதும் ஒரு காண்கிறதை கண்டு கொண்டேன். அடுத்த தலைமுறையின் மத்தியில் நாம் காண விரும்பும் காரியங்களில் முதலாவதாக நம்மை ஈடுபடுத்தி, இந்த தேசத்தில் நாம் காண விரும்பும் மாற்றமாக நாம் ஆகக்கடவோம். இன்று நம் சபையில் காணப்படும் மாதிரிகளின் ஏழ்மையை உடைக்க வேண்டும்.

**அடுத்த தலைமுறையினரை நம்புதல் -** முதிய தலைமுறையினர் அனுபவங்கள் மற்றும் ஞானத்தினால் நிரம்பியிருக்கும் போது, அடுத்த தலைமுறையினரை நம்பி, அவர்களோடு இணைந்து, அவர்களுடைய திறமை மற்றும் பெலனை ஊக்கவிக்க வேண்டும்.

*டேனியேல் டான், SIB KL வாலிப போதகர்*

*photography by jeret slack*

# வாலிபர்களை முதியவர்களுடன் இணைந்து செயலாற்ற வைத்தல்

ஒரு தேசத்தை ஒரே நாளில் மாற்றவோ அல்லது ஒரு மனிதருடைய சித்தம் மற்றும் வல்லமையால் இதை சாதிக்கவோ முடியாது. ஒரு தேசத்தை ஒன்றாக மற்றிட தாழ்மையாக செயலாற்ற வித்தியாசமான தலைமுறைகளிலிருக்கும் ஆட்கள் நமக்கு தேவை. நாம் ஒன்றாக கூடும்போது, நம்முடைய பெலனையும், பெலவீனங்களையும் ஒன்று கூட்டி, தேசத்தை மாற்றக்கூடிய ஒரு ஒன்றுபட்ட செயலாற்றக்கூடிய சக்தியாக மாற முடியும்.

ஒவ்வொரு தலைமுறையினரும் இணைந்து செயலாற்ற பொதுவான லட்சியத்திற்கு போராடுகையில் நமது வரையரை மற்றும் பலவீனங்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் திறமை வாய்ந்த இளைஞர்களுக்கு அளவற்ற சக்தி இருக்கிறதை காண்கிறோம். வேலை செய்யும் இளைஞர்கள் அதிக செயல்முறை மற்றும் சிந்திப்பவர்களாக காணப்படுகிறார்கள். நடுத்தர வயதினர் நிறைய ஆட்களுடன் தொடர்பு கொண்டவர்களாகவும், முதியவர்கள் அனுபவசாலிகளாக, நிறைய ஞானத்துடன் இருக்கிறார்கள்.

நான் ஜொகூர்பாருவில் உள்ள ஒரு இளம் ஆசிரியர். என் வேலையின் தன்மை, நேரடியாக என்னை தேசம் கட்டுதலில் ஈடுபடுத்துகிறதை நான் நம்புகிறேன். நான் என்னை தனியாக மாற்றத்தை கொண்டுவரும் பிரதிநிதியாகவோ அல்லது, அதே சிந்தையுள்ள ஒரு பெரிய ஸ்தாபனத்தோடு இணைந்து பங்காற்றுவதன் மூலமாகவோ செயல்பட முடியும். அதிக ஞானம் பெற்ற அனுபவசாலிகளோடு செயலாற்றக்கூடிய வாய்ப்புகள் எப்போதும் எனக்கு இருப்பதற்காக நான் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கடந்தாண்டு டிசம்பரில் கிறிஸ்தவ ஆசிரிய சங்க சந்திப்பில் என்இசிஎப் மலேசியா ஒரு கல்வி ஒருங்கிணைப்பு ஸ்தாபனத்தை முன்மொழிந்த போது, அங்கு நான் மூத்த ஆசிரியர்கள், ஆலோசகர்கள் மற்றும் முதல்வர்களை சந்திக்கும் வாய்ப்பை பெற்றேன். அவர்கள் காரியங்களை குறித்து விவாதித்தபோது, நான் அவர்களை கண்டு ஆச்சரியப்பட்டேன். நான் இப்போது இருக்கிற பாதையில் அவர்கள் நடந்து வந்திருப்பதை அறிந்தபோது, எனக்கு மிகவும் ஆறுதலாகவும், உற்சாகமாகவும் இருந்தது. அவர்கள் கூட்டத்திற்கு வந்திருப்பது அவர்களின் உண்மைத்துவத்தை காட்டுவதாக இருந்தது மற்றும் நானும் அவர்களை போல மாற வாஞ்சித்தேன் அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருப்பது எனக்கு உற்சாகமாவும், ஆசீர்வாதமாகவும் இருந்தது.

கூட்டம் முடிந்தவுடன் ஒரு இளம் விரிவுரையாளர் என்னை அழைத்து, அவருடைய 2010 நாளைய ஆசிரியர்களை எழுப்புவது என்ற திட்டத்தில் சேரும்படி அழைத்தார். பிறகு இன்னொரு இளம் ஆசிரியரையும் சேர்த்துக் கொண்டோம். நாங்கள் மூன்று பேரும் கூடி, திட்டமிட்டு, எங்களுடைய சொந்த ஆற்றலை கொண்டு செயலாற்றினோம். எங்களுக்கு தேவையான புள்ளி விபரங்களை TCF விடமிருந்து பெற்றுக்கொண்டோம். எங்களுக்கு தரிசனத்தை விரிவாக்க என்இசிஎப் சார்ந்தவர்கள் உதவினார்கள். இந்த மக்களுடன் இணைந்து செயலாற்றுவது ஒரு பெரிய பாக்கியம். அவர்களுடைய ஒருங்கிணைப்பு மற்றும் அனுபவத்தின் மூலம் செயல்முறை யோசனைகள் எங்களுக்கு அதிகமாய் சாதிக்க உதவி செய்தது. இந்த திட்டம் முழுமை பெற நான் எதிர்பார்த்து கொண்டிருக்கிறேன்.

அதே வேளையில் இந்த எளிய சாட்சியின் மூலம், அநேக வேலை செய்யும் வாலிபர்கள் ஒன்று கூடி மற்ற தலைமுறையினரோடு செயலாற்றி தேசத்தை மாற்றிட முன் வருவார்கள் என்பதே எனது ஜெபமும், நம்பிக்கையுமாயிருக்கிறது. வித்தியாசமான தலைமுறையை சார்ந்த மக்கள் இணைந்து செயலாற்றும்போது, எண்ணிலடங்கா சாதனைகள் இருக்கிறது.

*இவ்முன் யோக் (இளம் ஆசிரியர்)*

# தெய்வீக ஒழுங்கு

நாள் 1
8 ஆகஸ்ட்
ஞாயிறு

தேவன் என்பவர் ஒழுங்கின் தேவன்! நாம் எந்த நிலையில் இருந்தாலும், அவருடைய தெய்வீக ஒழுங்கு நம் உள்ளான மனிதனில் இருப்பதில் தான் உண்மையான சமாதானம் மற்றும் சந்தோஷத்தின் இரகசியம் அடங்கியுள்ளது. குடும்பத்திலோ அல்லது சபையிலோ நாம் தேவனின் ஒழுங்கை கடைபிடிக்க தவறினால் மற்றும் அதை நம்முடைய வசதி மற்றும் எதிர்பார்ப்புக்கு திருப்பினால் அதன் விளைவாக சமாதான குலைச்சலும், குழப்பமும் ஏற்படும். தனிப்பட்ட ரீதியிலும், தேசிய ரீதியிலும் இதை தான் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். நாம் அவருடைய ஒழுங்கின்படி நமது வாழ்க்கையை சரி செய்து, சரியான காரியங்களுக்கு முதலிடம் கொடுத்து, கிறிஸ்துவினுடைய கர்த்தத்துவத்திற்கு கீழ்ப்படிவோமானால் வெற்றி பெறுவோம்.

**தியானம் :** ஏசா 38:1-4 கர்த்தர் எசேக்கியாவிடத்தில் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, அவன் வீட்டை ஒழுங்குப்படுத்திட உத்தரவிட்டார். அவன் மரணத்திற்கு முன்பாக செய்யக்கூடிய அவசியமான ஆயத்தத்தை இது குறித்தாலும், நாம் அதை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்த 40 நாட்களில், உங்கள் வாழ்க்கை, குடும்பம், தேசம் ஆகியவற்றை சீரமைத்து, நமது முக்கியத்துவங்களையும் உறவுகளையும் சரி செய்ய வேண்டும். நீங்கள் கண்ட தோல்வியை அறிக்கையிட்டு உங்கள் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் முக்கியத்துவங்களை சரிப்படுத்த அவரிடம் கேளுங்கள்.

**செயல் :**
உங்களை புண்படுத்தியவர்களோடு ஒப்புரவாகுங்கள்.உங்களை தாழ்த்தி மன்னிப்பை அவிழ்த்து விடுங்கள். உங்களை அறியாமல் நீங்கள் பிறரை புண்படுத்திய காரியங்களை தேவனை வெளிப்படுத்தும்படிக்கு கேளுங்கள் பிறகு, சரி செய்யுங்கள்.

**தேசம் :**
ஆதி மக்களை கனப்படுத்துதல்; ஓராங் அஸ்லி - நாம் அவர்களுக்கு எதிராக செய்த பாவங்களை தேவன் நமக்கு மன்னித்து மற்றும் அவர்களுக்கு வேண்டிய கனம் அவர்களை சேர வேண்டும். தலைவர்களை அவர்கள் மத்தியில் எழுப்பி, விசுவாசிகள் பெலப்படுத்தப் பட்டு, வார்த்தையில் வேரூன்ற வேண்டும். மிகு குறைவாக சந்திக்கப்படும் ஜாதிகள் மத்தியில் சபை உருவாகிட உதவியும், ஆள்பலமும் வேண்டும்.

**கிறிஸ்துவை தேசங்களுக்கு வரவேற்று..** அவருடைய ஒழுங்கை நிலைநாட்டுதல்.

**ஜெபகுறிப்புகள் :**

**சபை மற்றும் தேசம் :** அடையாளம் காணுதல் மற்றும் மனந்திரும்புதல் நமது கீழ்ப்படியாமை அவருடைய கட்டளைகளை மீறுதல், அவருடைய கர்த்தவத்தை அசட்டை செய்து புறக்கணிப்பது.

- விக்கிராதனை - பொருளாசை, சுயம் அந்தஸ்து, வெற்றி
- சுதந்திரம் - பெருமை, சண்டை, மாய்மலம்
- ஒழுக்கமின்மை - இச்சை, விபச்சாரம், திருமணத்திற்கு வெளியே உறவு, ஆபாச படம்.
- அநீதி - காணாமல் போனவர்களிடம் காட்டப்படும் பாரபட்சம், ஏழைகள், நெருக்கப்படுகிறவர்கள்.

* கிறிஸ்துவின் சரீரம் ஆவியோடும், உண்மையோடும் அவரிடம் திரும்ப வேண்டும். எல்லா உடைந்த உறவுகள் மத்தியிலும் சுகமும், ஒப்புரவாகுதலும் உண்டாக வேண்டும். ஒழுங்கையும், ஒற்றுமையையும் சபையில் நிலைநாட்ட வேண்டும்.

* எல்லா அரசாங்கம் மற்றும் தனியார் துறையில் தேவனுடைய நீதியும், நியாயமும் காணப்பட வேண்டும். பிரதமருக்கு ஞானம், துணை பிரதமர் மற்றும் கேபினட் தேசத்தை தேவபயத்தில் ஆளுசை செய்ய வெண்டும். தொடர்ச்சியான சமாதானம், இணக்கம், அமைதி மற்றும் செழிப்பு.

**குறிப்பு**

நாள் 2
9 ஆகஸ்ட்
திங்கள்

# கட்டிடங்களை கட்டுதல்

தேவனே குடும்பத்தை ஏற்படுத்தி, திருமணங்களை அடிப்படை கட்டிடமாக மனித சமூதாயத்தில் வைத்திருக்கிறார். குடும்ப பிரிவு ஆட்டம் காணும்போது, சமூதாயமும் ஆட்டம் காணும். குடும்ப பிரிவு என்பது மிக வல்லமையுள்ளது மற்றும் குடும்ப அமைப்பு தாக்கப்படுகிறதை உணர்ந்து குடும்பங்கள் எழும்ப வேண்டும். இந்த யுத்தம் ஆதியாகமத்தில் ஆதாமுடைய குடும்பத்தில் ஆரம்பித்து, இன்று அதே அழிக்கும் சக்தி குடும்பங்களுக்கும், திருமணங்களுக்கும், மற்றும் பிள்ளைகளுக்கும் எதிராக உள்ளது. ஆனால் தேவன் சரி செய்வரும், உடைந்த உறவுகளை கட்டுகிறவராய் இருக்கிறார். தேவன் நம் பட்சத்தில் இருந்தால், நமக்கு எதிராக இருப்பவர் யார்? மறுபடியும் கட்டப்படவும் பெலப்படுத்தப்படவும் மற்றும் குடும்பங்கள் பாதுகாக்கப்படவும் அவரை நோக்கி பார்ப்போம்.

**தியானம் :** எபே 5:22-33, 6:1-4 நம் இருதயத்தில் கோபம், ஒதுக்கப்படுதல், வெறுப்பு, கசப்பு, அல்லது பெற்றோர், துணைவர்கள், சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை மன்னிக்க முடியாமல் இருப்பீர்களானால், தேவனை தேடுங்கள். அறிக்கையிட்டு, ஒருவருக்கொருவர் மனந்திரும்புங்கள்.

**செயல் :** உங்கள் வீடு மற்றும் வசிப்பீடத்தை சுற்றிலும் நடந்து, உங்கள் குடும்பம் மற்றும் உங்கள் பகுதியில் உள்ள மற்ற குடும்பங்களுக்காக ஜெபியுங்கள். ஒவ்வொரு வீட்டார் மீதும் கிறிஸ்துவின் வருகை வந்து அவர்கள் கிறிஸ்துவுக்குள் சீர்ப் படுத்தலையும், சமாதானத்தையும் கண்டடைய ஜெபியுங்கள்.

**கவனம் :** பெண் அமைச்சர்கள், குடும்பம் மற்றும் சமூதாய மேம்பாடு டத்தோ ஸ்ரீ ஷரிசாட் அப்துல் ஜாலீல் மற்றும் டத்தின் படுக்கா சிவ் மெய்பன் அவர்களுக்காக ஜெபியுங்கள். ஞானம் மற்றும் வழிமுறைகள் சிறப்பான வழியில் பெண்கள் குடும்பங்கள் மற்றும் சமூதாய மேம்பாட்டில் செயல்படுத்த-ப்பட்ட ஜெபியுங்கள். நாட்டின் வீடமைப்பு காரியங்களில் பயமின்றி, பாரபட்ச மின்றி நீதியும், நியாயமும் செயல்படுத்தப்பட வேண்டும்.

தேசத்தில் இருக்கும் எல்லா குடும்பங்கள் மீது **கிறிஸ்துவின் ஆளுகையை** வரவேற்க வேண்டும்.

**ஜெபகுறிப்புகள் :**

* சுகம் மற்றும் குடும்பங்களில் ஒப்புரவாகுதல் உண்மையான அன்பையும், கீழ்ப்படிதலையும் எல்லா குடும்ப உறவுகளை சீராக்கும்.

* விசுவாசத்தில் எழும்பி, எதிரியானவன் குடும்பங்களுக்கு எதிராக திருடவும், கொல்லவும், அழிக்கவும் போட்ட திட்டங்களிலிருந்து குடும்பங்களை விடுவிக்க கர்த்தரிடத்தில் கேட்க வேண்டும். யோவேல் 2:25 குடும்பங்களுக்காக சுதந்தரித்துக் கொள்ளுங்கள், "வெட்டுக்கிளிகள் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்கு தருவேன்!"

* பெலனுள்ள கிறிஸ்தவ வீடுகளுக்காக ஜெபியுங்கள், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வழி நடத்தி, தெய்வீக மதிப்பீடுகளை தங்கள் பிள்ளைகளுக்கு போதித்து, பொறுப்புள்ள தலைமுறை குடிமக்களாக, எந்த இனம் மற்றும் மதம் சார்ந்தவர்களாக இருப்பினும், தேவன், குடும்பம், சமூதாயம் மற்றும் தேசத்தை நேசித்து சேவை செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

குறிப்பு

# திருமணத்திற்கான புதிய திராட்சரசம்!

நாள் 3
10 ஆகஸ்ட்
செவ்வாய்

திருமணம் என்பது தேவனுக்கு முன்பாக பரிசுத்த உடன்படிக்கை மற்றும் அவரால் உண்டாக்கப்பட்டது. (ஆதி 2:24) திருமணத்தின் முக்கியத்துவம் யோவான் 2:1-11ல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இயேசு ஒரு திருமண விருந்தில் கலந்து கொண்டு தன் ஊழியத்தை ஆரம்பித்து, தண்ணீரை திராட்சரசமாய் மாற்றிய தனது முதல் அற்புதத்தை செய்தார். யூதர்களுடைய கலாச்சாரத்தில் திருமண விருந்து ஒரு வாரம் வரை நடைபெறும். இந்த நீண்ட விருந்தில் திராட்சரசம் முடியுமானால், அது வீட்டுக்காரருக்கு அவமானத்தை கொண்டு வரும்.

அதே போல இன்று, சோதனைகளையும், வலிகளையும் வருடங்கள் வழியே இனிமையானதாக மாற்றுவதற்கு பதிலாக, நிறைய திருமணங்கள் ருசியற்ற, புளிப்பான மற்றும் கசப்பான, மற்றவைகள் வெறுமையாக, காய்ந்து மற்றும் நம்பிக்கையற்ற நிலையில் உள்ளன. எந்த சூழ்நிலையாய் இருப்பினும், நாம் நம்முடைய இருதயங்களை தேவனிடம் திருப்பினால், அவர் உடன்படிக்கையை காக்கும் தேவனாக இருக்கிறபடியால், எல்லா திருமணங்களையும் சரிச்செய்வார். நம்முடைய உடன்படிக்கை உறவை அவரோடு கூடி புதுப்பிப்பதின் மூலம், நாம் ஆரம்பிப்போம்!

**தியானம் :** யோவான் 2:1-11 திருமண தம்பதியர்களுக்கு, உங்கள் வாழ்வில் புது திராட்சரசம் இருக்கிறதா? அல்லது கோபம், கசப்பு போன்றவற்றால் காய்ந்து போயிருக்கிறதா? அறிக்கை செய்து விட்டு விடுங்கள் சபை மற்றும் தேசத்தின் சார்பாக, அவரோடுள்ள நமது உறவில் ஏற்பட்ட பிளவுக்கும், உலக காரியங்களுக்கு பின் ஓடி நாம் செய்த ஆவிக்குரிய விபச்சாரத்திற்கும் மன்னிப்பு கேட்போம்.

**செயல் :** உங்கள் துணைவருக்கு ஒரு சிறிய அன்பளிப்பை வழங்கி, ஆச்சரியப்படுத்துங்கள். உங்கள் சபையிலுள்ள விதவை மற்றும் மனைவியை இழந்தவர்களை ஆசீர்வதியுங்கள்.

**தேசம் :** எருசலேமில் உள்ள நமது சகோதரர்களுக்காக ஜெபியுங்கள் சங்கீதம் 122:6-9-சமாதான பிரபு வாக்குத்தத்த பூமியில் தமது மக்களை ஆளுகை செய்து, அவர்களுடைய இருதயம் மறு படியுமாக அவரிடத்தில் திருப்பப்பட ஜெபியுங்கள். அவர்களுக்கும், அரபியர்களுக்கும் இடையே ஒப்புரவாகுதலும், அன்பும் மற்றும் நன்மதிப்பும் ஏற்பட ஜெபியுங்கள்.

தமது மக்களை காக்கவும், காப்பாற்றவும் **கிறிஸ்துவை** வாக்குத்தத்த பூமிக்கு **வரவேற்றல்.**

**ஜெப குறிப்புகள் :**

* தம்பதியர்கள் தேவனை தங்கள் திருமணத்திற்கு நடுவே வைத்து, மகிழ்ச்சி மற்றும் உற்சாகம் பொங்கிட, அவர்கள் அவரோடுள்ள ஆதி அன்பையும் மற்றும் ஒருவரோடு ஒருவருக்குள்ள அன்பையும் சீர்ப்படுத்தி கொள்ள வேண்டும். ஒருவருக்குகொருவர் கீழ்ப்படிந்து வெளிப்படையான தொடர்பு கொள்ள வேண்டும்.
* திருமணங்கள் அழிவு, விவாகரத்து, ஏமாற்றம், அழுத்தம் மற்றும் தவறான சிந்தனையில் இருந்து காப்பாற்றப்பட ஜெபியுங்கள். உடைந்த தம்பதியர்கள் மத்தியில் மன்னிப்பு, சுகம் மற்றும் சீர்த்திருத்தம் காணப்பட ஜெபியுங்கள்.
* திருமணங்களை உடைக்க சத்துரு செய்கிற அனைத்து காரியங்களுக்காக ஜெபியுங்கள் எல்லா திருமணங்களுக்கும் பாதுகாக்கப்பட வேண்டும். உங்கள் போதகர் மூப்பர் மற்றும் தலைவர்களுடைய திருமணங்களுக்காக ஜெபியுங்கள்.
* உங்கள் வாலிபர்கள் ஒரே பாலினத்தை சேர்ந்த திருமணங்கள், விபச்சாரம் ஆகியவற்றில் ஈடுபடாதபடிக்கு காத்து கொள்ளுங்கள். இளை தலைமுறையினருக்கு தேவனுக்கு பயப்படும் தம்பதியர்கள் நல்ல மாதிரிகளாக இருக்க ஜெபியுங்கள்.

**குறிப்பு**

நாள் 4
11 ஆகஸ்ட்
புதன்

# தேவனை கனப்படுத்துதல்

நம்முடைய தேசத்தின் ஆவிக்குரிய நிலை என்ன? மற்றும் ஏன் நம் குடும்பங்களில் சபைகளில் மற்றும் தேசத்தில் இருக்கும் இனங்கள் மத்தியில் ஏன் அதிக பிரச்சனைகள் காணப்படுகிறன்றன? என ஒருவேளை நாம் கேட்கக்கூடும். காரணங்கள் சாதாரணமானவைகள் நாம் இரண்டு கட்டளைகளை உடைத்து விட்டோம் - தேவனை நேசிப்பது மற்றும் ஒருவரையொருவர் நேசிப்பது. இந்த இரண்டு கட்டளைகளை மீறப்பட்டதின் விளைவாக எல்லா உறவுகளும் உடைக்கப்பட்டிருக்கிறது. நாம் எழுப்புதல், அமைதி, ஒற்றுமை மற்றும் தேசத்தில் ஒழுங்கை காண விரும்பினால், “நாம் தேவனை கனம்பண்ணி மற்றும் ஒருவருக்கொருவரை கனம் பண்ண வேண்டும்” என்ற முக்கிய காரியத்தை கருத்தில் கொள்ள வேண்டும். எல்லா தலைமுறைகளும், குடும்பங்களும், சபைகளும் மற்றும் தேசமும் சுகம் பெறவும், தேவனுடைய ஒழுங்கை இந்த தேசத்தில் நிலைநாட்டிட நாம் நம்முடைய கீழ்ப்படியாமை, துர்க்குணங்கள் மற்றும் பெருமையை களைந்து போட வேண்டும்.

**தியானம் :** மல் 2:2-6, மத் 19:19, நீதி 15:33 நான் தேவனையும், என் பெற்றோர்களையும், அண்டை அயலாரையும், நண்பர்களையும் மற்றும் அதிகாரங்களையும் எந்த விதத்தில் கனவீனம் பண்ணியுள்ளேன்? உதாரணமாக கொடுப்பதில் நான் தேவனை கனம் பண்ணுகிறேனா? நமது வாழ்க்கை மற்றும் நடத்தையினால் தேவனை கனவீனம் பண்ணியிருந்தால், அறிக்கையிட்டு, சபை மற்றும் தேசத்தின் சார்பில் மனந்திரும்பிட வேண்டும்.

**செயல்:** உங்கள் காயப்படுத்தியவர்களோடு மற்றும் நீங்கள் காயப்படுத்தியவர்களோடு ஒப்புரவாகி ஆசீர்வதியுங்கள்.

**கவனம் :** உபவாச மாதம் நமது அயலாருக்காக நாம் ஜெபிக்கும் இம்மாதத்தில் தவறான எண்ணங்கள் மற்றும் அவர்கள் மீது நமக்கிருக்கும் கோபங்களை விட்டு விடுவோம். அன்பு கிறிஸ்துவின் சரீரத்தை நிரப்பி, அவர்களுக்கு மரியாதை செலுத்தி, அவர்களும் தேவனுடைய சிருஷ்டி என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய தாலந்துகளை நினைத்து, ‘‘கர்த்தாவே என் கண்கள் கிறிஸ்துவின் அன்பின் கண்கள் வழி அவர்களை பார்க்க ஜெபிக்கிறேன்.’’ (கிறிஸ்துவை சரவாக்கில் வரவேற்று… அவர் தமது கரங்களில் இந்த மாநிலத்தை தாங்கிட வேண்டும்.) ‘‘உண்மைத்துவத்துடனும், கீழ்ப்படிதலுடனும் கிறிஸ்துவின் திருச்சபைகள் இருந்தால், அது ஒரு வல்லமையான, எந்தவொரு எழுப்புதல் கூட்டங்களை காட்டிலும் ஆவிக்குரிய பெலனை கொண்டது.’’ (டி. ஜெக்சன்)

## ஜெப குறிப்புகள் :

* கனம் மற்றும் மரியாதை முதலாவது தேவனோடுள்ள நமது உறவில் ஆரம்பித்து, எல்லா உறவிகளிலும் பெற்றோர் பிள்ளைகள், கணவன் மனைவி, முதியோர்கள் & வாலிபர், முதலாளி & வேலைக்காரர், சபை தலைவர்கள் & அங்கத்தினர்கள், அரசாங்க அதிகாரிகள் & பொதுமக்கள் மத்தியிலும் காணப்பட வேண்டும்
* எல்லா உடைந்த உறவுகளிலும் மன்னிக்கக் கூடிய தாழ்மை காணப்பட வேண்டும் விசுவாசிகள் எல்லா விதத்திலும் தேவனுக்கு சிந்தனையிலும், செயல்களிலும் வார்த்தையிலும், கனம் செலுத்தி அவருடைய உப்பு, ஒளியாக இருக்க வேண்டும்.
* கிறிஸ்துவின் சரீரம், நிறைவான உதவிகளோடு இரட்சிக்கப்படாதவர்கள் ஏழைகள் மற்றும் உதவியற்றவர்களை கவனிக்க வேண்டும்.

குறிப்பு

# உங்கள் இருதயத்தை திருப்புங்கள்

நாள் 5
12 ஆகஸ்ட்
வியாழன்

மல்கி 4:5-6 தேவன் நமக்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்பி, பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடத்தில் திருப்புவேன் என்று நமக்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார். நம்முடைய கிறிஸ்தவ சுதந்திரம் ஒரே தலைமுறையோடு அழிந்து போகாமல், தேவனுடைய அன்பு தலைமுறைதோறும் காணப்பட பிதாக்கள் தங்கள் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் கர்த்தருடைய வழியில் போதித்து வழி நடத்த வேண்டும். ஆகவே, பெற்றோர்களும், பிள்ளைகளும் பரலோக தேவனிடத்தில் தங்கள் இருதயங்களில் மனந்திரும்பி, நீதியின் சூரியன் தன் செட்டைகளில் கீழ் அவர்களை குணமாக்கிட ஜெபியுங்கள்.

**தியானம் :** மல் 4:1-6 உங்கள் அன்பானவர்களை குறித்து நீங்கள் கோபம், எரிச்சல், மன்னியாமை அல்லது கசப்பாக இருக்கிறீர்களா? தேவனிடத்தில் அறிக்கையிட்டு மன்னிப்பை பெற்று கொள்ளுங்கள்.

**தேசம் :** நமது அயலார் - பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய இருதயத்தை அப்பா பிதாவிடம் திருப்பிட ஜெபியுங்கள் அவர்கள் அதிகமாக வசிக்கும் பட்டணம் மாவட்டம் மாநிலத்திற்காக, அவர்களுடைய ஆவிக்குரிய விழிப்புணர்ச்சிக்காக ஜெபியுங்கள்.

அவருடைய நீதி மற்றும் நியாயம் ஆற்றை போல கடந்தோட **கிறிஸ்துவை** விலாயாவில் **வரவேற்றுதல்...**

## ஜெப குறிப்புகள் :

* நம்முடைய அப்பா பிதாவிடம் இருதயங்கள் திரும்பிட கேளுங்கள். பெற்றோர் பிள்ளைகள், போதகர் / மூப்பர் - தங்கள் மந்தைகள், எல்லா உறவுகளிலும் வெளிப்படை உண்மையான நம்பிக்கை மற்றும் மரியாதை காணப்பட வேண்டும்.

* குடும்பங்களில் சீர்த்திருத்தமும், ஒப்புரவாகுதலையும் நீதியின் சூரியனிடத்தில் கேட்க வேண்டும். குடும்ப பலிப்பீடங்கள் சீர்த்திருத்தம் கண்டு, வீடுகள் தேவையில் உள்ளவர்களுக்கு அவருடைய வெளிச்சத்தின் வீடாக இருக்க வேண்டும்.

* தகப்பனார்கள் குடும்ப தலைவர்களாக தங்களுக்குரிய பங்கை செயல்படுத்தி, மாதிரிகளாக வாழ்ந்து, தங்கள் வீட்டை தேவனுக்கு பயந்து பாதுகாத்து வழிநடத்திட வேண்டும்.

* பெரிய எழுப்புதலை முழு தேசத்தில் கொண்டு வரும் பின் மாரி மழையை பொழியும்படி தேவனிடத்தில் கேப்போம்.

**குறிப்பு**

நாள் 6
13 ஆகஸ்ட்
வெள்ளி

# ஈடாக முடியாது

இன்றைய பெற்றோர் எந்த தலைமுறைகளை பார்க்கிலும் தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் தொடர்பற்று, குறைவான ஐக்கியம் கொண்ருக்கின்றனர். அநேக பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பை தங்கள் பெற்றோர் அல்லது துணையின் பெற்றோர், அல்லது பிள்ளைகளை பராமரிக்கும் இல்லங்களுக்கு விட்டு விடுகிறார்கள். பிள்ளைகளின் ஒழுக்கம் மற்றும் சமூக மதிப்பீடுகள் தொலைக்காட்சி மற்றும் வீடியோ விளையாட்டினால் பாதிக்கப்படுகின்றன.

பிள்ளைகளை வளர்க்க கர்த்தருடைய வழியில் அவர்களை வழிநடத்த தேவனே பெற்றோர்களை தந்துள்ளார். ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள், பள்ளிகள், வாலிப ஊழிய போதகர்கள் அல்லது வேறே யாருக்கும் அவர் இந்த பொறுப்பை தரவில்லை. பெற்றோர்த்துவத்தில் எளிதான வழி கிடையாது. பெற்றோர் தேவன் தங்களுக்கு கொடுத்த பொறுப்பையும், உயர்ந்த அழைப்பையும் அலட்சியப்படுத்த கூடாது.

**தியானம் :** உபா 11:16-21 இந்த கட்டளையை எங்கே நிறைவேற்றாமல், கர்த்தருடைய வழியில் அவர்களை நடத்தாமல் நம் பங்கை செய்வதில் அலட்சியமாக இருக்கிறோம் என்று நம் இருதயத்தை சோதனை செய்வோம். கர்த்தரிடத்தில் அறிக்கை செய்வோம்.

**செயல் :** பெற்றோரே, ஒருநாள் அல்லது சில நாட்கள் வேலையில் இருந்து விடுப்பட்டு, உள்ளங்கள் பிள்ளைகளோடு நேரத்தை செலவிடுங்கள்.

**தேசம் :** கிழக்கு கரை சபைகள் அவருடைய நம்பிக்கையின் அழைப்புக்கு விழிப்பாக இருப்பதற்கு ஜெபியுங்கள். இருளின் மத்தியில் அவருடைய வெளிச்சமாக, நம்முடைய அயலாருக்கு அவரை அடையாளம் காட்டிட ஜெபியுங்கள். நம்முடைய அயலாரை குறித்து சபைக்கு இருக்கும் பயத்தை தேவன் நீக்கி, அவருடைய சபையை ஆயத்தப்படுத்திட ஜெபியுங்கள்.

திரெங்கானுவில் அவருடைய மகிமையை எல்லா மக்களுக்கும் வெளிப்பத்திட **கிறிஸ்துவை வரவேற்றல்**

## ஜெப குறிப்புகள் :

* இல்லதரசிகளுக்காக கர்த்தரிடத்தில் நன்றி கூறி, பெலன் மற்றும் கிருபையினால் அவர்கள் நிரப்பப்பட்டு, அவருடைய அழைப்பையும், இலக்கையும் நிறைவேற்றிட ஜெபியுங்கள்.
* வேலை செய்யும் பெற்றோரிடத்தில் தேவன் இடைப்பட்டு, அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கான தேவ சித்தத்தை அறிந்து கொள்ள ஜெபியுங்கள். அலுவலான காரியங்கள் மத்தியிலும் தேவனுக்கு பெற்றோர் முதல் இடம் கொடுக்க வேண்டும். நல்ல மதிப்பீடுகளையும், கொள்கைகளையும் ஒவ்வொரு வீடுகளிலும் போதித்து, பிள்ளைகளை ஒழுக்கத்தில் தேறினவர்களாக வளர்க்க வேண்டும்.
* பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கான தேவ சித்தத்தை தேடி, ஆயத்தப்படுத்தி, வழி நடத்தி அவருடைய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட ஒப்புக் கொடுக்க வேண்டும்.
* பாலர் பள்ளிகள், பராமரிப்பு இல்லங்கள், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு தெய்வீக மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகளை போதிக்க வேண்டும்.

குறிப்பு

# சாபமா அல்லது ஆசீர்வாதங்களா?

**நாள் 7**
**14 ஆகஸ்ட்**
**சனி**

ஆபிரகாம், நம் விசுவாச தந்தை, தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களை சுதந்தரித்து கொண்டு, அந்த தலைமுறை ஆசீர்வாதமானது அடுத்த தலைமுறைக்கு கடந்து சென்றது. ஆதி 27:33ல் ஈசாக்கு ஏசாவிடம், நான் அவனை ஆசீர்வதிக்கிறேன். அவன் ஆசீர்வாதமாக இருப்பான். ஆதி 48-49, யாக்கோபு தன் மகன்களை அழைத்து, அவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் ஆசீர்வதித்து அவர்களுடைய எதிர்காலத்தை குறித்து தீர்க்கத்தரிசனமாக உரைத்தான். பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உரைத்த விசுவாச வார்த்தைக்கு மிக பெரிய வல்லமையுண்டு.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவருடைய வாக்குத்தத்த வார்த்தையினால் விசுவாசத்தோடு ஆசீர்வதிக்கவேண்டும். இன்று நாம் நம்மை பார்த்து கேட்க வேண்டிய கேள்வி ''என் பிள்ளைகள் அல்லது அடுத்த தலைமுறையின் வாழ்க்கை மற்றும் இலக்கை நிர்ணயிக்கக்கூடிய பட்சத்தில், அவருடைய வார்த்தையை விசுவாசத்துடன் அவர்கள் மீது பேசும்படி என்ன ஆவிக்குரிய ஆழம் எனக்குள் இருக்கிறது? அல்லது ''நான் மரணத்திற்குரிய வார்த்தையை பேசியுள்ளேனா?'' நாம் இன்று நமது நாவுகளை சுத்திகரிக்க வேண்டும்.

**தியானம் :** நீதி 18:2, யாக்கோபு 3:3-11, உங்கள் பிள்ளைகள் மீது எவ்விதமான மரணம் மற்றும் சாபமான வார்த்தைகள் பேசப்பட்டிருந்தால் அறிக்கையிட்டு மனந்திரும்புங்கள். உங்கள் இருதயத்தை, சுத்திகரித்து, பரிசுத்தும் பண்ணும்படிக்கு தேவனிடத்தில் கேட்டு, ஜீவனையும் மற்றும் ஆசீர்வாதங்களை கொண்டு வரும் வார்த்தைகளை பேசுங்கள் பெற்றோரே, உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதியுங்கள்.

**தேசம் :** சங்கீதம் 24 உங்கள் மாநிலத்தில் மிரகடனப்படுத்தி, மகிமையின் ராஜா ஆவிக்குரிய விழிப்புணர்ச்சி மற்றும் தெய்வீக சந்திப்பை நம் அயலார் மத்தியில் ஏற்படுத்திட ஜெபியுங்கள் திரள் கூட்டம் அவருடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க ஜெபியுங்கள்.

ஆவிக்குரிய நிலத்தை மாற்றிட **கிறிஸ்துவை** பகாங்கிற்கு **வரவேற்றல்.**

## ஜெப குறிப்புகள் :

* புண்பட்டிருக்கிற சிறுவர்கள் மற்றும் வாலிபர் உணர்ச்சியிலும் ஆவிக்குரிய ரீதியிலும் தங்கள் பெற்றோர், உறவினர், ஆவிக்குரிய தலைவர்கள் ஆசிரியர்கள் மற்றும் மற்றவர்களால் காயப்பட்டு ஊனமானவர்களை தேவன் சுகமாக்க வேண்டும். தங்கள் வாழ்க்கையில் காணப்படும் எல்லா பொய் மற்றும் சாபத்தை உடைக்க வேண்டும்.
* வாலிபரும் பிள்ளைகளும் தேவனுடைய அன்பு மற்றும் வார்த்தையில் வேரூன்றி, தங்களுடைய அடையாளம் மற்றும் பாதுகாப்பை பெற்றுக்கொண்டு, அவருடைய அழைப்பையும் இலக்கையும் நிறைவேற்ற வேண்டும்.
* எல்லா வயதினர் மத்தியிலும் ஒரு தீர்க்கதரிசன தலைமுறை எழும்ப வேண்டும், இவர்கள் தேவ வார்த்தையில் வேரூன்றியவர்கள், அவருடைய ரேமா வார்த்தையை கெட்ட காலத்தில் ஆவிக்குரிய வெற்றிக்கும் மற்றும் தேசத்தின் மாற்றுதலுக்கு பயன்படுத்தவேண்டும்.
* தேவ பயமுள்ள விசுவாசிகளை அதிகாரமுள்ள இடங்களில் நிறுத்தி, அவருடைய தீர்க்கதரிசன குரலாக, முடிவுகளையும் மற்றும் மாநில திட்டங்களின் காரியங்கள் மீதும் மாற்றத்தை கொண்டு வரவேண்டும்.

**குறிப்பு**

நாள் 8
15 ஆகஸ்ட்
ஞாயிறு

# ஒருவரையொருவர் சார்ந்துக் கொள்ளுதல்

நாம் தேவனை தேடி, நம் இருதயத்திலும், சிந்தையிலும் இருக்கிற பெருமை மற்றும் மேட்டிமையை அகற்ற வேண்டும். மோசேயை போல நமக்கு தாழ்மை மற்றும் வலுவான ஒற்றுமை குழு இருக்க வேண்டும். அப்பொழுதுதான். நம் தேசத்தில் இருக்கும் இராட்சதர்கள் மேற்கொள்ளப்படுவார்கள். மத் 17:8-16 யுத்தத்தில் ஜெயிக்க தலைமுறையினர் ஒருவரையொருவர் சார்ந்திருந்தை நாம் காண்கிறோம். மோசே தன் கையை வெற்றியாளர் போல தூக்கி கொண்டு நிற்கலாம், ஆனால் யோசுவாவும், அவனுடைய ஆட்களும் இல்லாவிட்டால், அங்கே எந்த வெற்றியும் இருக்காது. இந்த மோசமான நேரத்தில், நாம் எவ்வளவு அதிகமாக வேலை செய்ய வேண்டும். தனித்து அல்ல, ஒருவரையொருவர் சார்ந்து கொண்டு, எல்லா தலைமுறைகளோடு, சேர்ந்து அவருடைய ராஜ்யத்திற்காகவும் மற்றும் எல்லா பகுதிகளிலும் அவருடைய மகிமைக்காக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

கவனம் : யோவான் 15:5, யாத் 17:18-16 மற்றவர்களோடு வேலை செய்வதில் உங்களுக்கு பிரச்சனை உண்டா? அல்லது வேலை ஸ்தலத்திலோ ஊழியம் அல்லது சபையில் உள்ள இளம் தலைவர்களுக்கு கீழ்ப்படிவதில் உங்களுக்கு பிரச்சனை உண்டா? நேர்மையுடன் உங்கள் பெருமை, பொறாமை, வாக்குவாதம் ஆகியவற்றை அறிக்கையிட்டு விட்டுவிடுங்கள்.

**செயல் :** மற்றொரு சபையை சார்ந்த ஒரு நண்பரை அழைத்து, நம்முடைய தேசத்தின் ஒற்றுமையின் ஆசீர்வாதங்களை பேசி, சபை சார்பற்ற ஸ்தாபனங்கள், கிறிஸ்தவ தனியார் இயக்கங்கள், ஊழிய ஒருங்கிணைப்புகள் மற்றும் தேசம் கட்டுதலின் நன்மைக்காக ஒருவரையொருவர் சார்ந்து, கனம் செய்து ஊழியம் செய்ய ஜெபியுங்கள்.

**தேசம் :** ராஜா, சுல்தான்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் - தேவ பயம் அவர்களுக்கு இருக்க வேண்டும். தேசத்தையும், மாநிலத்தையும் ஞானமாக ஆளுகை செய்யனும். எல்லா தீர்மானங்களும் உண்மையாகவே ஒரே மலேசியாவை பிரதிபலிக்கவும், எந்தவொரு குறிப்பிட்ட இனைப்பாகுபாடின்றி எல்லோரையும் அடையாங்கண்டு, ஜாதிகளுக்குள் இருக்கும் பெலத்தையும், திறனையும் கொண்டு ஒருவரையொருவர் சார்ந்து தேசத்தை கட்ட வேண்டும்.

அவருடைய நாமம் கனப்பட **கிறிஸ்துவை** பினாங்கில் **வரவேற்றல்...**

**ஜெப குறிப்புகள் :**

* கிறிஸ்துவின் சரீரத்தின் சார்பாக, நம்முடைய பெருமை சுய கௌரவத்திற்காக மன்னிப்பு கேட்டு, மற்றவர்களோடு பணியாற்றுவதற்கான தாழ்மை மற்றும் கிருபையை கேட்போம். புதுபிக்கப்பட்ட சிந்தனைகள் மற்றும் இருதயங்கள் எல்லா தலைமுறைகளையும் அனுசரித்து, அதனுடைய பெலத்தையும், தாலந்தையும் பாராட்ட வேண்டும்.
* போதகர்களும், தலைவர்களும் தங்கள் அங்கத்தினர் களுடைய பெலனையும், தாலந்துகளையும் பகுத்தறிந்து, உற்சாகப்படுத்தி அவர்களுடைய தாலந்து மற்றும் அழைப்பின்படி ஊழியம் செய்ய அவர்களை நியமணம் செய்யவேண்டும்.
* சபை - எல்லா வயதினர் மத்தியில் ஒற்றுமை மற்றும் உறுதியான குழு வேலை, அவருடைய கிரியைகளை உட்புறமும், வெளிப்புறமும் விரிவாக்கி சமூதாயம் மற்றும் தேசத்தை தொடுவதற்கு தேவையாக இருக்கிறது.
* எல்லா வயதினர் மத்தியிலும் ஒரு தீர்க்கதரிசன தலைமுறை எழும்ப வேண்டு, இவர்கள் தேவ வார்த்தையில் வேரூன்றியவர்கள், அவருடைய ரேமா வார்த்தையை கெட்ட காலத்தில் ஆவிக்குரிய வெற்றிக்கும் மற்றும் தேசத்தின் மாற்றுதலுக்கு பயன்படுத்தவேண்டும்.

**குறிப்பு**

# ஆவிக்குரிய மேய்ப்பர்கள்

நாள் 9
16 ஆகஸ்ட்
திங்கள்

மேய்ப்பனை வெட்டி, ஆடுகளை சிதறடித்தல், எங்கே வெட்ட வேண்டும் என எதிரிக்கு தெரியும், போதகர் மூப்பர்கள் மற்றும் சபை தலைவர்கள் எதிரியின் தாக்குதலுக்கு முக்கிய இலக்காக இருக்கிறார்கள். ஆவிக்குரிய தலைவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட மனிதர்கள் அல்ல. அவர்களுக்கும் தேவைகள் கட்டுப்பாடுகள் மற்றும் பலவீனங்கள் உண்டு. மேலும் ஊழியமானது அதிகமான பிரச்சனைகளோடும், சவால்களோடும் காணப்படுகிறது. சிறந்த ஊழியக்காரர்களாக அவர்கள் செயல்பட அவர்களுக்கு உறுதிமொழி, உதவி மற்றும் சபையில் இருந்து உற்சாகம் தேவைப்படுகிறது. அவர்களுடைய வெற்றி, சபையின் வெற்றியாக மாறும்! விசுவாசிகளே நாம் எழும்பி, மாற்றத்தை ஏற்படுத்த ஆவிக்குரிய தலைவர்களாக தினமும் ஜெபிப்போம்.

**கவனம் :** மாற்கு 14:27, எபிரேயர் 13:17 தலைவர்கள் சத்துருவின் உன்னத இலக்கில் இருப்பதால், நீங்கள் எத்தனை முறை உங்கள் போதகர், மூப்பர் மற்றும் தலைவர்களுக்காக ஜெபிக்கிறீர்கள்? உங்கள் ஆவிக்குரிய தலைவரோடு உங்களுக்கு மனஸ்தாபம், கோபம் அல்லது எரிச்சல் உள்ளதா? நேரமெடுத்து கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டு, சுத்திகரிக்கும்படி கேட்டு, எல்லா பண்புகளையும் ஆற்றிடும்படிக்கு கேளுங்கள்.

**செயல் :** அனுதினமும் உங்கள் ஆவிக்குரிய தலைவருக்காக ஜெபியுங்கள்.

**தேசம் :** நம் அயலாருடைய மத தலைவர்கள்; ஜோதிகளின் பிதா தம்முடைய நித்திய வெளிச்சத்தை கொண்டு அவர்கள் இருதயத்தை சத்தியத்தினால் பிரகாசிக்கப் பண்ணுவாராக! அவர்கள் மத்தியில் நம்முடைய கர்த்தர் தம்மை தீவிரமாக வெளிப் படுத்துவராக!

(அவருடைய மகிமை வெளிப்பட **கிறிஸ்துவை** கிளாந்தானில் **வரவேற்றல்**

**ஜெப குறிப்புகள் :**

* தேவ அழைப்புக்கு தங்கள் வாழ்க்கையில் கீழ்ப்படிந்து அவர்களுடைய தியாகங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். அவர்களுடைய வாஞ்சையை புதுப்பித்து, கர்த்தரோடு அவர்கள் நெருங்கிட வேண்டும் அவர்களுடைய துணை மற்றும் பிள்ளைகளோடு இருக்கும், உறவு பெலனடைய வேண்டும்.
* சபை பிரிவினைக்காக அறிக்கையிட்டு, மனந்திரும்புதல், எல்லா பிரச்சனைகள், சண்டைகள், பிரிவினை, குறைகூறுதல், பொறாமை, புறம்பேசுதல், பெருமை மற்றும் முரட்டாட்டம் ஆகியவற்றை விட்டுவிட வேண்டும். எல்லா உள்ளூர் சபைகளிலும் ஒற்றுமை, அன்பு மற்றும் மன்னிப்பு காணப்பட வேண்டும்.
* மேய்ப்பர் மற்றும் ஆடுகளுக்கிடையே உற்சாகம் மற்றும் நல்ல உறவு ஏற்பட வேண்டும்.
* ஸ்தாபனங்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமைக்காக நன்றி செலுத்தி, அவைகள் தொடர்ந்து ஒரே வல்லமை சக்தியாகவும், குரலாகவும் நிற்க வேண்டும். எல்லா ஸ்தாபன தலைவர்கள் ஆசீர்வதித்து, ஒவ்வொருவரும் அதிக ஞானம், வருங்காரியங்களுக்கு தங்கள் சபைகளை ஆயத்தப்படுத்தக்கூடிய அபிஷேகமுள்ளவர்களாக காணப்பட வேண்டும்.
* ஒரே இருதயத்துடன் கூடிய ஒன்றுப்பட்ட தரிசனம் மற்றும் தேவ-ராஜ்யத்தை கட்டக்கூடிய நோக்கம்.
* சபைகள் மத்தியில் ஒரு உறுதியான ஒருங்கிணைப்புகள் மூலம் உபகரணங்கள் மற்றும் ஆள்பலத்தை கொண்டு ஒற்றுமையுடன் சமூதாய திட்டங்களை மேற்கொண்டு தொலைந்து போனவர்களை சந்திக்க வேண்டும்.

## குறிப்பு

# வாலிப வல்லமை

இதற்கு முன்னதாக வாலிபர்கள் இப்படியாக ஜெபத்தில் எழும்பி, தேச நலனை மனதுருக்கத்தோடு சந்தித்தது கிடையாது. இது வெறும் ஆரம்பம், வரவேண்டிய காரியத்தின் முழுமையை நாம் இன்னும் காணவில்லை. இந்த நெருக்கடி காலத்தில், பரிசுத்த ஆவியானவர் தம்முடைய அழைப்பை இந்த வாலிப தலைமுறையினர் மத்தியில் உறுதிப்படுத்தி, அவர்கள் அவருடைய வார்த்தைக்குள் அடங்கியிருக்கும் பரிசுத்த வாழ்க்கை மற்றும் முற்றிலும் தங்களை அர்ப்பணித்து அவருடைய முழுமைக்குள் வருவதற்கு அவர்களுக்கு உதவி செய்வாராக.

சபையாக நாம் இந்த தலைமுறையை தங்கள் பெற்றோர்களுடன் சேர்ந்து பயிற்றுவித்து பெலப்படுத்தி, இயேசுவுக்காக வாஞ்சையுடன் எழும்பி, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்மையை பெற்றுக் கொண்டு, அவருடைய நோக்கத்தை நிறைவேற்றிட வேண்டும். அவர்களுக்கு தடையாக நில்லாமல், அவர்களை கர்த்தரிடம் ஒப்புக் கொடுப்போம்.

தியானம் : எபே 3:16-20 கிறிஸ்துவுக்குள் உங்கள் வேர் எவ்வளவு ஆழமானது? வாலிபர்கள், இளம் வாலிபர்களோடு தொடர்பு கொள்ள உங்களுக்கு சிரமமாக உள்ளதா? இந்த வசனங்களை கொண்டு வாலிபர்களுக்காவும், உங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**செயல் :** செய்தி தாளை வாசித்து, வாலிபர்கள் சம்பந்தப்படுத்தும் காரியங்களில் இருந்து அவர்களை தேவன் விடுவிக்க ஜெபியுங்கள்

**தேசம் :** கர்த்தர் பள்ளிகள், கல்லூரிகள் பல்கலைக் கழகங்களில் உள்ள கிறிஸ்தவ மாணவர்கள் எழுப்பி, அவர்கள் பாரத்துடன் நம்முடைய அயலாரை தைரியத்தோடும், விசுவாசத் தோடும் சந்திக்க, ஜெபியுங்கள்.

அவருடைய நன்மை மற்றும் வல்லமை வெளிப்பட **கிறிஸ்துவை** ஜொகூரில் **வரவேற்க** வேண்டும்.

**ஜெப குறிப்புகள் :**

* அவருடைய அன்பும், வல்லமையும், இந்த தலைமுறையினர் மீது ஊற்றப்பட்டு, அவர்கள் அவருக்காக பிரித்தெடுக்கப்பட்டு, அவருடைய சிறப்பில் சிறந்து விளங்குவார்களாக, அவருடைய வார்த்தை மூலம் தேவனை குறித்து அறிவு பசி அதிகரிக்கட்டும். நிறைய இடைநிலை பள்ளி மாணவர்கள் வேதாகம பாடத்தை பள்ளிகளில் கற்றுக் கொள்ளட்டும்.
* பிசாசின் திட்டங்களும், நாகரீகத்தின் மூலம் இந்த தலைமுறையை சீர்குலைத்து அடிமைப்படுத்துகிற காரியங்கள் அழிக்கப்படட்டும். புகைபிடிப்பது, போதைப் பொருள், ஆபாச படம், ஓரினக்காதல், பொருளாசை, இணையத்தள விளையாட்டுகள், குண்டர் கும்பல்கள்.
* தேவ பயமுள்ளவ மாதிரிகளால் அவர்கள் வழிநடத்தப்பட வேண்டும். வாலிப போதகர்கள் மற்றும் ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்
* கிறிஸ்தவ வாலிர்பர்கள் மத்தியில் வல்லமையான மாணவ இயக்கங்கள் எழுப்பிட வேண்டும். சாட்சியுள்ள குழுவினர் எழும்பி, பள்ளிகள், கல்லூரிகள், தனியார் பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கிறிஸ்துவை பறைசாற்ற வேண்டும்.

**குறிப்பு**

# ராஜ்ய பிரகாரமான நோக்கம்

**நாள் 11**
**18 ஆகஸ்ட்**
**புதன்**

பணிபுரியும் இளைஞர்களுக்காக பிதாவின் இருதயம் ஏக்கமாய் இருக்கிறது. இந்த தலைமுறையினருக்கு அதிக திறன்களும், வாய்ப்புக்களும் இருந்தாலும், தங்கள் வேலையில் அலுவலாகவும், அல்லது சபை தங்களுக்கு சம்பந்தமற்றது எஷன்று நினைப்பதாலும், அதிகளவில் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர். அவர்கள் கைப்பற்றப்பட்டு வசீகரிக்கப்படும்போது, அவர்கள் உலகத்தை மாற்றுபவர்களாக, தேவன் தங்களுக்கென வைத்திருக்கும் நோக்கத்தையும் மற்றும் அவருடைய ராஜ்ய நோக்கத்தின் அழைப்பை நிறைவேற்றுவார்கள். நாம் தேவனை குறித்து ஆழமாக அறிந்து கொள்ளும்போது தானியேல் 11:32 நிறைவேறி, தேவ வல்லமையான விருப்பங்களில் நடத்தப்படுவோம், இந்த தலைமுறையினரின் பக்தியும், முதலிடம் அவரிடமே இருப்பதாக! நாம் அவரை நம் இருதயத்தின் மையத்தில் வைக்கும்போது, அவருடைய ராஜ்ய நோக்கங்களுக்காக வித்தியாசங்களை ஏற்படுத்துபவர்களாக நடப்போம்.

**தியானம் :** கொலோ 3:1-2, யோவான் 4:34, இயேசு பிதாவின் சித்தம் செய்யும்படியான அருட்பணியோடு வந்தார். உங்கள் அருட்பணி மற்றும் வாழ்க்கையின் நோக்கம் என்ன? கர்த்தருக்கு உங்களை ஒப்புக் கொடுத்து, அவரை நெருக்கமாக அறிந்திடக்கூடிய பசியை கேளுங்கள். கர்த்தரை விட்டு நம்முடைய இருதயங்கள் விலகிட செய்த காரியங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுவோம். உங்கள் வாழ்க்கை மறுசீரமைக்க அவருடைய கிருபை மற்றும் பெலனை பெற்றுக்கொள்வோம். உங்கள் மூப்பர்களிடமிருந்து ஆலோசனை மற்றும் உதவியை கேளுங்கள்.

**செயல்பாடு :** கார் பிரயாணம் அல்லது நடந்து செல்தல் - கடைகள், அலுலங்கள், அரசாங்க துறைகள் ஆகியவற்றை சுற்றி நடந்து, கிறிஸ்தவர்கள் தங்கள் பங்கையும் மற்றும் அவருடைய நோக்கங்களுக்கான தங்கள் அழைப்பையும் குறித்து விழிப்படைய ஜெபியுங்கள்.

எல்லா துறைகளிலும் ஜெப குழுக்கள் பெரும்பான்மை குழுவினர்களை நோக்கி வளருவதாக! அவருடைய ராஜ்ஜியம் வருவதற்கு சிலாங்கூரில் **கிறிஸ்துவை வரவேற்றல்.**

**ஜெபகுறிப்புகள் :**

* விசுவாசிகள் தங்கள் நம்பிக்கை அழைப்பு மற்றும் நோக்கத்தில் விழிப்புணர்ச்சியடைவார்கள் குறிக்கோள் இல்லாத மற்றும் நோக்க மில்லாதவைகளிலிருந்து விடுபட வேண்டும்.
* சபைகள் ஏற்ற திறமையுள்ள ஊழியங்களை ஏற்படுத்தி, ஆவிக்குரிய வரங்கள் வெளிப்பட்டு சபை, வேலை ஸ்தலம் மற்றும் சமூதாயத்திலுள்ள அவிசுவாசிகளுக்காக சேவையாற்ற வேண்டும்.
* சபையில் ஆவிக்குரிய தந்தையர் மற்றும் தாயார்கள் எழும்பி, பணிபுரியும் வாலிபர்களுக்கு குடும்பம், வேலை மற்றும் கர்த்தருடைய ஊழியத்தில் கிறிஸ்துவின் மாதிரிகளாக செயலாற்றிட வேண்டும். தங்கள் வாழ்க்கை துணையை குறித்து அவர்கள் கார்த்தருக்கு கீழ்ப்படிந்து, தங்கள் பரிசுத்தம் மற்றும் உண்மைத்துவத்தால் அவரை கனம் பண்ண வேண்டும்.
* பணி புரியும் எல்லா இன இளைஞர்களும் தங்கள் எண்ணங்களையும், வாஞ்சையையும் சரியான வழியில் ஒழுங்குப்படுத்தி, கர்த்தர் அவற்றை ஆசீர்வதித்து, ஜெப குழுவாக அவர்கள் உருவாகி, இந்த தேசத்தின் மாற்றத்திற்காக எழும்பிட ஜெபியுங்கள்.

**குறிப்பு**

நாள் 12
19 ஆகஸ்ட்
வியாழன்

# திருமணமாகதவர்கள் – பிளவுபடாத தியானம்

ஆண் மற்றும் பெண்கள் மத்தியில் உள்ள மக்கள் தொகை வித்தியாசத்தில், நிறைய நடுத்தர வயது பெண்மணிகள் ஏற்ற வாழ்க்கை துணையில்லாமல் வாழ்கின்றனர். உள்ளூர் சபைகளில் திருமணமாகாத ஆண்களை விட, பெண்கள் அதிகமாக இருப்பதால், நிலைமை மோசமடைந்து காண்ப்படுகிறது. இந்த சூழ்நிலை விசுவாசத்திற்கு வெளியே திருமணம் செய்திடும் அபாயத்திற்குள் கொண்டு வந்திருக்கிறது. அதனுடன் திருமணத்தை குறித்து பெற்றோர் மற்றும் சமூகத்தின் மூலம் வரும் நெருக்கடிகளும் இதில் அடங்கியுள்ளது. திருமணமாகாமல் இருப்பது ஒரு சமூதாய நிந்தையாக இருக்கிறது. அல்லது நிறைவான வாழ்க்கைக்கு நமக்கு வாழ்க்கை துணை தேவையா? என சிலர் கேட்க கூடும். உண்மையான நிறைவு திருமணத்தின் மூலம் வராமல் கர்த்தரிடத்தில் இருந்தே வருகிறது. ஆகவே, நம் மத்தியில் இருக்கும் திருமணமாகதவர்களை உற்சாகப்படுத்துவோம். அவருடைய பார்வையில் எல்லோரும் விலையேறபெற்றவர்கள் மற்றும் எந்த குழுவும் மற்றொரு குழுவை விட மேலானது இல்லை. சமூகத்தில் நாம் எந்த இடத்தில் இருந்தாலும், கர்த்தருக்கு முன்பாக நாம் சரிசமமானவர்கள். ஆகவே நாம் ஒரே சரீரத்தில் ஒன்றாக இணைந்தவர்களாக நிற்போம். பிறகு தேவன் கீழே நோக்கி ''அவர்களால் செய்ய கூடாத காரியம் ஒன்றுமில்லை.'' ஆதி 11:6

**தியானம்:** 1 கொரி 32-35 நீங்கள் திருமணமானவர் அல்லது திருமணமாகதவராயிருந்தாலும் நிறைவான வாழ்க்கையை வாழ்கிறீர்களா? அங்கே பொய்யான எதிர்பார்ப்போ அல்லது ஒப்புக் கொடுத்தலின் பயம் இருக்கிறதா? ஒப்புக்கொடுத்து, அவரிடம் சரணடையுங்கள்.

**தேசம் :** பெண்கள் எல்லா மத நெருக்கடிகள் மற்றும் சமூதாய அநீதிகளில் இருந்து விடுதலை பெற ஜெபியுங்கள். தேவன் அவர்கள் மத்தியில் வல்லமையாக அசைவாடி, அவர்கள் இயேசுவுக்குள் புதிய ஜீவனையும், அர்த்தத்தையும் கண்டு கொள்ள ஜெபிக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்திருக்க **கிறிஸ்துவை** பெர்லீசுக்குள் **வரவேற்றல்**

**ஜெபகுறிப்புகள் :**

* திருமணமாகதவர்கள் அவரில் தங்களுடைய திருப்தி மற்றும் நிறைவை பெற்றுக்கொள்வார்கள். ஒரு ஒப்புக் கொடுக்கப்பட்ட வாழ்க்கை மற்றும் அவரிடம் பிளவுபடாத தியானம்.
* அவர்களுடைய நேரம் உபகரணங்கள் மற்றும் வரங்களை அவரை சேவிக்க பயன்படுத்த வேண்டும். கர்த்தர் அவர்கள் மத்தியில் உதாரண தலைவர்கள் எழுப்பி, இளைய தலைமுறையினரை அவர்கள் சீஷராக்கி மற்றும் வழிநடத்திட வேண்டும்.
* விவாகரத்து அல்லது தங்கள் துணையை இழந்தவர்கள். அவர்கள் புதுப்பிக்கப்பட்ட வாஞ்சை மற்றும் அவரை சேவிக்கும்படியான இலக்கையும் கண்டு கொள்ள ஜெபியுங்கள்
* தேசங்களிலுள்ள குறைவாக சந்திக்கப்படுகிற மக்கள் குழுக்கள் மத்தியில் அவர்கள் வேலையாட்களாக எழும்பிட வேண்டும்.

**குறிப்பு**

# நம்முடைய தங்க குழுக்கள்

நாள் 13
20 ஆகஸ்ட்
வெள்ளி

பெரும்பாலான வயதானவர்கள் தங்களுடைய வயதின் காரணமாகவும், சுறுசுறுப்பான இளைஞர்களின் பங்கெடுப்பின் காரணமாகவும் சபையில் முக்கிய பங்கெடுப்பில் இருந்து விலகி கொள்கின்றனர். மற்றவர்கள் சிறப்பாக செயலாற்றுகிறார்கள். என்று நினைத்து, பின்புறமாக காணமால் போகின்றனர். மூத்தவர்கள் விலகி, சபையில் செயலற்று இருக்கலாமா? அவர்கள் நேரம் முடிந்து போனதா? தேவன் அனுமதிக்கவில்லை! சபை மூத்தவர்கள் மறக்கப்பட்டு அல்லது கைவிடப்படுதலை அனுமதிக்க கூடாது. அவர்கள் ஒரு பொக்கிஷமாகவும், அவர்களுக்கென ஒரு பங்கும் உள்ளது. அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்தின் செல்வாக்கை சேர்த்து வைத்த ஞானத்தை, தலைமுறையினரிடம் பகிர்ந்து கொள்ளலாம். அவர்கள் இளையவர்களுக்கு ஆலோசகர்களாக வழிகாட்டிகளாக சேவையாற்ற முடியும். தேவன் ஆபிரகாம் மற்றும் மோசேயை வயதான காலத்தில் அழைத்து, சரித்திரத்தையும் மற்றும் தேசங்களுடைய இலக்கையும் மாற்றினார் என்பதை நாம் மறந்து போக கூடாது. ஒரு கீரிடம் இந்த விலையேறப்பட்ட கற்கலின்றி முழுமை பெறாது. ஆகவே நாம் உறுதியுடன், ஒன்றாக நின்று நம்முடைய தங்க கழுகளுக்கான அவருடைய இலக்கை அழைப்போம்.

**தியானம் :** ஆதி 12:1-5, அவருடைய வார்த்தை அல்லது வாக்குத்தத்தங்களுக்கு நீங்கள் எப்படி பதிலளிக்கிறீர்கள்? சந்தேகம், அவர்களுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் தள்ளிபோட்டு அல்லது தயக்கத்தோடு இருக்கிறீர்களா? மற்றும் உங்கள் இயற்கை சுபாவங்கள் சொல்கிறபடி உங்கள் தீர்மானங்களை உறுதிப்படுத்தி, உங்கள் செயல்களை நியாயப்படுத்துகிறீர்களா? நம்முடைய அவிசுவாசம்; சுய நீதி மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றில் இருந்து மனந்திரும்ப வேண்டும்.

**தேசம் :** பரிசுத்த ஆவியானவர் நமது அயலார்கள், அவர்களுடைய சமூதாய தலைவர்கள், இன தலைவர்கள், குடும்ப தலைவர்கள் மீது ஊற்றப்பட்டு, அவர்கள் கனவுகள் தரிசனங்கள் கண்டு, திரளானவர்கள் அவருடைய ராஜயத்திற்குள் வர ஜெபியுங்கள்.

பழங்கால வழியை
மேற்கொள்ள **கிறிஸ்துவை**
மலாக்காவில் **வரவேற்றல்.**

## ஜெபகுறிப்புகள் :

* சபையில் இருக்கும் எல்லா மூத்த மக்களுக்காக கர்த்தரிடம் நன்றி செலுத்த வேண்டும். ஒவ்வொரு ஆவிக்குரிய வரத்தால் அவர்களை ஆசீர்வதித்து, மாற்றத்தை கொண்டு வரும் பிரதிநிதியாக தேவன் அவர்களை வல்லமையாக பயன்படுத்தவும் மற்றும் இளைய தலைமுறையினரை தெய்வீக வழியில் அவர்கள் மூலம் கொண்டு வர வேண்டும்.
* தங்கள் கடந்தகால மகிமைகள் சாதனைகளை நோக்கி பார்ப்பதிலிருந்து மூத்தவர்கள் விடுப்பட்டு, புதிய வழிகளில் கர்த்தரை தேடி, தற்போதைய சூழலுக்கு ஏற்ப எல்லா தலைமுறையினரோடு நல்ல உறவை ஏற்படுத்தி, மாற்றத்தை கொண்டு வர தயாராக இருக்க வேணடும்.
* மூத்தவர்கள் உள்ளூர் சபைகளில் தங்கள் இடத்தையும், பங்கையும் கண்டடைய வேண்டும். உணவகங்களில், சந்தைகள், கடைகள் மற்றும் பூங்காவில் மூத்தவர்கள் பலர் எழும்பி சுவிஷேத்தை அறிவித்திட, தேவனிடம் கேட்க வேண்டம்.
* ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்கள் தங்கள் வரங்களையும், தாலந்துகளையும் சமூதாயம் மற்றும் தேசம் கட்டுதலுக்கு பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு**

நாள் 14
21 ஆகஸ்ட்
சனி

# வாசலை சுதந்தரிந்துக் கொள்தல்

ஆதி 22:17-18ல், வெற்றியின் வாக்குத்தத்தம் ஆபிரகாரம் மற்றும் அவருடைய வம்சத்திற்கு கொடுக்கப்பட்டது. நாம் அவருடைய சபையாக ஆபிரகாமின் ஆவிக்குரிய வம்சத்தினராக கிறிஸ்துவின் சத்துருக்களின் மீது வெற்றியை நாட்ட வேண்டும். இந்த வாக்குத்தத்தமும், ஆசீர்வாதமும் நமது கைகளில் இருக்கிறது. அவர் சீர்ப்படுத்தலுக்கு தமது நேரத்தை துரிதப்படுத்தி, குடும்பங்களை எல்லா தலைமுறைகளோடு ஒன்றிணைத்து, ஒன்றாக சேர்ந்து ஒரு சேனையாக எதிர்வருகிற யுத்தத்திற்கு நிற்க வேண்டும். எல்லா தலைமுறையினரும் ஒன்றாக நின்று, மாற்றத்திற்கான வாசல்களை சுதந்தரிக்கும் போது, நிச்சயமாகவே பாதாளத்தின் வாசல்கள் அவருடைய சபையை மேற்கொள்ள முடியாது! தேவ சேனையே, எழுந்து நம்முடைய பிரதான தளபதியோடு சேர்ந்து கொள்வோம்.!

ஆதி 22:17-18 சத்தமாக பிரகடனப்படுத்தி உறுதிப்படுத்துங்கள் தேவனுடைய வாக்குத்தத்ததை குறித்து நிச்சயமில்லாமல் இருக்கிறீர்களா? எல்லா அவிசுவாசம் மற்றும் சந்தேகத்தை விட்டு, தேவனிடம் நம்புவதற்கான விசுவாசத்தை கேட்டு, நடை போடுங்கள்.

**தேசம் :** நம் அயலார் மத்தியில் இருக்கும் வல்லமையான விசுவாசிகள் மேல் இடங்களில் அதிகாரத்தில் வைக்கப்பட்டு, வேதாகம விதிமுறைகள் மற்றும் மதிப்பீடுகளின்படி தீர்மானங்களை செய்து, சமூதாயத்தை தொடுவதற்கான தயவு மற்றும் வாய்ப்புக்களுக்காக ஜெபியுங்கள்.

மேலான இடத்தை எடுத்துக் கொள்ள **கிறிஸ்துவை** புத்ரா ஜெயாவிற்கு **வரவேற்றல்**

## ஜெபகுறிப்புகள் :

* குடும்பங்களின் முழு சீர்த்திருத்தம் மற்றும் சீரமைப்புக்காக ஜெபியுங்கள், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளோடு ஒன்றாக ஜெபிக்க வேண்டும்.
* குடும்ப பலிப்பீடங்களை சீரமைத்தல்
* அதிகமான வாலிபர்களும், பிள்ளைகளும் தங்கள் பெற்றோருடன் ஜெப கூட்டங்களில் பங்கு பெற வேண்டும்.
* உயர்ந்த அதிகாரமுள்ள எல்லா இடங்களிலும் வல்லமையான ஜெபக்குழுக்கள் எழும்பி, எல்லா பகுதிகளிலும் ஆளுகை செய்ய வேண்டும்.
* கடைசி நாட்களில் தேவன் அவருக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் வெல்ல முடியாத சேனையை அழைக்க வேண்டும். (யோவேல் 2:10-11), எல்லா தலைமுறையினரையும் சேர்த்து, எல்லா இடங்களையும் ஆக்கிரமித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்குள் கீழ்ப்படுத்த வேண்டும்.
* அறுவடையின் தேவன் பெரியவர்கள், வாலிபர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் வேலையாட்களை எழுப்பி, அவர்கள் காணாமல் போனவர்களை சந்தித்து, போதித்து மற்றும் அவர்களை சீஷத்துவத்திற்குள் வழி நடத்த வேண்டும்.

குறிப்பு

# ஒரே வழி

**நாள் 15**
**22 ஆகஸ்ட்**
**ஞாயிறு**

நாம் இந்த அழகான தேசத்தில் சந்தர்ப்ப சூழ்நிலையினால் இருக்காமல், அவருடைய தெய்வீக நியமனத்தின்படி, தேசத்திலிருக்கும் எல்லா பல்லின மக்களுக்கான, அவருடைய மீட்பின் திட்டத்தில் பங்குள்ளவர்களாக இருக்கிறோம். 28 லட்சம் வெவ்வேறான பல்லின மக்களின் இலக்கு நம் கைகளில் இருக்கிறது! காலத்தின் ஆரம்பத்திலிருந்து, சத்துரு திருடி, கொள்ளையாடி, திசை திருப்பி, பல்லின மக்களின் இருதயத்தையும், சிந்தனையும் குருடாக்கி, அவனை ஆராதிக்க வைத்து, தேவனுடைய ஜீவனிலிருந்து அவர்களை பிரித்து விட்டான். நமக்கு இங்கு ஒரு அருட்பணியும், தேசத்திற்கான ஒரு தரிசனமும் உண்டு. ஒரு வழி, ஒரு நம்பிக்கை, ஒரு விசுவாசம், ஒரு ஜீவன் மட்டுமே இருக்கிறது. எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் மட்டுமே காண முடியும். சரித்திரத்தை மாற்றவும், தேசத்தின் இலக்கின்படி, எல்லா மானிடரையும் அவருக்காக மீட்கவும் கூடிய அந்த நம்பிக்கை சபையிடம் இருக்கிறது. எல்லா மதத்தை சார்ந்தவர்களுக்கு உங்கள் சாட்சி, கிறிஸ்துவை அவர்களுக்கு காட்டுகிறது? அல்லது பணியின் பாரத்தை கண்டு, பின் வாங்கி கொண்டிருக்கிறீர்களா?

தியானம் : 2 பேதுரு 3:9, கொலோ 1:10, 13,14, 20-27 உங்கள் வாழ்த்துகையின் நோக்கம் என்ன? கார்த்தரிடம் நம்மை ஒப்புவித்து குணாதிசயம், நடத்தை மற்றும் வாழ்க்கை முறையில் நாம் எங்கே சாட்சியை இழந்து போனோம் என்பதை அறிக்கையிட்டு, மனந்திரும்புவோம்.

**தேசம் :** நம் அயலார் மீது திறந்த வானம், ஆராதனை ஸ்தலங்களிலும், வீடுகளிலும் கர்த்தர் ஆவிக்குரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், குமாரனை குறித்த சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் வெளிப்பட வேண்டும். சாதரண விசுவாசிகள் மூலம் ஆவிக்குரிய வரங்கள், சுகம், விடுதலை மற்றும் மனமாற்றத்தை கொண்டு வர கர்த்தர் கிரியை செய்ய வேண்டும்.

அவருடைய புதிய காற்று வீசிட சபாவில் **கிறிஸ்துவை வரவேற்போம்.**

**ஜெபகுறிப்புகள் :**

* தேசம் மற்றும் பல்லின மக்களின் சார்பில் நின்று, விக்கிராதனைக்காக மன்னிப்பு கேளுங்கள். தேவன் எல்லா பல்லின மக்களையும் அவர்களுடைய ஆவிக்குரிய குருட்டாட்டத்திலிருந்து விடுவித்து, அவர்கள் இந்த பிரபஞ்சத்தின் அதிபதியோடு செய்துள்ள எல்லா கட்டுகளையும் உடைக்க வேண்டும்.
* பரிசுத்த ஆவியானவர் பல்லின மக்கள் மீது ஊற்றப்பட்டு, ஆவிக்குரிய விழிப்புணர்ச்சி மற்றும் பெரிய எழுப்புதல் நடைபெற வேண்டும்.
* கர்த்தர் தமது சபையை ஆயத்தப்படுத்தி, எல்லா தலைமுறையை சார்ந்து சபையினர் பயிற்றுவிக்கப்பட்டு, போதிக்கப்பட்டு, புதிய விசுவாசிகளை சீஷத்துவத்திற்குள் வழி நடத்த வேண்டும். காணாமல் போனவர்களை குறித்து வாஞ்சை மற்றும் மனதுருக்கம் கொள்ளவேண்டும்.
* சபைகள் அருட்பணிக்காக பொங்கி எழுந்து, சுவிஷேசம் கொல்லப்படாத உள்ளூர் மற்றும் வெளியூர் இடங்களில்

**குறிப்பு**

# கல்வி

நிறைய ஆசிரியர்கள் தேசத்திலுள்ள நிறைய குடிமக்களுக்கு மிக பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறார்கள். கடந்தாண்டு மிஷன் பள்ளிகள் ஒன்று கூடுதலில், செயிண்ட ஜோன் கலாசாலையில் நமது பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜீப் தன் நாட்களிலிருந்த தனது ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தினார். நமக்கு பிடித்தமான ஆசிரியர்களை குறித்த நம் சொந்த கதைகளும் மற்றும் நம் வாழ்க்கையில் எப்படி அவர்கள் செல்வாக்குள்ள பங்கை ஆற்றினார்கள் என்பதை குறித்தும் நமக்கு எண்ணங்கள் இருக்கலாம். ஆசிரியர்கள் நல்ல மாதிரிகளாகவும் மற்றும் முன்மாதிரி குடிமக்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் ஒரு மாணவருடைய எதிர்காலத்தை சிறப்பாக்கவோ அல்லது உடைக்கவோ முடியும். அவர்களுடைய தியாகங்கள் மூலம் அவர்கள் ஒழுக்கமுள்ள குடிகளுக்கு பங்காற்றுகிறார்கள். இந்த பணி மிக முக்கியமான ஒன்றானால், ஏன் கிறிஸ்தவ ஆசிரியர்கள் குறைந்து கொண்டே போகின்றனர்? கீழேயுள்ள புள்ளி விபர அறிக்கை 2005ல் கிறிஸ்தவ ஆசிரியர்கள் ஐக்கியத்தின் மூலம் எடுக்கப்பட்டுள்ளது.

* ஏறக்குறைய 836 வித்தியாசமான வயதுள்ள கிறிஸ்தவ ஆசிரியர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கையில் 30 வயதிற்கு உட்பட்டவர்கள் 5%
* மிகப்பெரிய எண்ணிக்கை 42% அவர்கள் 50-59 வயதிற்குட்பட்டவர்கள் அப்படியனால் இன்னும் சில ஆண்டுகளில் அவர்கள் ஓய்வு பெற்றவுடன், மிகவும் குறைவான கிறிஸ்தவ ஆசிரியர்களே இருப்பார்கள்.

இது ஆபத்தான எண்ணிக்கை மற்றும் அதனுடைய விளைவும் தெளிவாக உள்ளது. அப்படியாக, அதிகமான கிறிஸ்தவ மாணவர்கள் ஆசிரியராக தேசிய பள்ளிகளில் தங்களை சேர்க்காவிட்டால், அடுத்த 10 ஆண்டுகளில் பள்ளிகளில் கிறிஸ்தவ ஆசிரியர்கள் இருக்கமாட்டார்கள். கிறிஸ்தவ சமூதாயமாக இருக்கும் நாம் இதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

தியானம்: நீதி 22:6 ஆசிரியர்களுக்காக தேவன் துதித்தல். நமது இளைய சமூதாயம் ஆசிரிய பணிக்கு ஒப்புக் கொடுக்கும்படிக்கு கர்த்தரிடம் வேண்டிக் கொள்வோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆசிரியர்களாக சேவையாற்ற தேவ அழைப்புக்கு இணங்கிட, விட்டுக் கொடுக்க வேண்டும்.

**தேசம் :** கல்வி அமைச்சர் தான் ஸ்ரீ முகிதீன் யாசின், சட்டங்களை இயற்றுபவர்கள், பாடத்திட்டங்களை வரைபவர், ஆசிரியர் பயிற்றுணர்கள், கல்வி அதிகாரிகள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், ஆலோசகர்கள், ஒழுங்கு ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகத்தினர், PTA செயற்குழு போன்றவை எல்லா இனத்திற்கான கல்வி தரத்தை உயர்த்திட, ஞானம், ஆலோசனை, அறிவு மற்றும் புரிந்துணர்வு ஆகியவற்றிக்காக ஜெபிக்க வேண்டும்.

தம்முடைய பிரசன்னத்தையும், மகிமை யையும் வெளிப்படுத்த **கிறிஸ்துவை** நெகிரி செம்பிலானில் **வரவேற்க வேண்டும்.**

## ஜெப குறிப்புகள் :

* தங்கள் பங்கையும், அழைப்பையும் குறித்து கிறிஸ்தவ ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கண்கள் திறக்கப்பட்டு, மற்றும் இருளின் மத்தியில் அவருடைய சாட்சியாக இருக்க ஜெபியுங்கள். பள்ளிகள் மற்றும் கல்லூரி மைதானங்களில் தேவனுடைய வல்லமையான அசைவு கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய பிரதிநிதிகளாக மற்றும் ஒழுக்கம் சம்பந்தமான மாற்றத்தை கொண்டு வருபவர்களாக இருக்க வேண்டும்.
* அதிகமான கிறிஸ்தவ பள்ளி தலைமையாசிரியர்கள் எழுப்பப்பட்டு, பள்ளிகளில் மாற்றங்களை கொண்டு வர வேண்டும். பள்ளிகளில் உறுதியான கிறிஸ்தவ ஐக்கியங்கள் உருவாக வேண்டும்.
* இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரின் ஞானம், இளைய தலைமுறையினர்கள் தெய்வீக மதிப்பீடுகளுள்ள அரசாங்க நிகழ்ச்சிகளை நடத்தி, தேவபயமுள்ள மற்றும் பயனுள்ள தலைவர்களை ஏற்படுத்த வேண்டும்.

### குறிப்பு

# தேசத்திலுள்ள செல்வம்! (வர்த்தகம்)

நாள் 17
24 ஆகஸ்ட்
செவ்வாய்

கர்த்தர் செல்வத்தை வர்த்தகத்தின்; மூலம் ஏற்படுத்தினார். செல்வமானது நீதியான வகையில் கையாண்டு, ஏழைகளோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒன்று. கொடுப்பது செல்வத்தை பகிர்ந்து, தேவையிலுள்ளவர்களுக்கு அளிப்பது, ஏழைகளுக்கான தேவனுடைய அற்புதமான பராமரிப்பு. தேவ ஜனங்கள் இந்த உண்மையை கடைப்பிடித்து தேவனை நீதி நியாயம், சத்தியம் உள்ளவராக எடுத்துக்காட்ட வேண்டும். அப்பொழுது தான் அவிசுவாசிகள் சேபாவின் ராஜஸ்திரியை போல 2 நாளா 9:2-4, வியப்படைந்து, தேவனுக்கு மகிமை செலுத்துவார்கள்.

தியானம் : உபா 8:17-18, மத் 6:33 தேவன் தேவைகளை சந்திக்கும் போதுமானவராக இருக்கிறார். என்பதை நமது கண்கள் காணும்படி கேட்டு, வியாபார ஈடுபாட்டில் நாம் அவருடைய நியாயம், சத்தியம் நீதியின் பிரதிநிதியாக இருப்பதை அவர்கள் காணவேண்டும். தெய்வீக மதிப்பீடுகளான நியாயம் சத்தியம் மற்றும் நீதியில் நீங்கள் தவறிய பகுதியை கர்த்தர் உங்களுக்கு வெளிப்படுத்த ஜெபியுங்கள் அறிக்கையிட்டு, அவர் உங்களை பலப்படுத்திட ஜெபியுங்கள்.

**தேசம் :** இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை தேசத்துடைய பொருளாதாரத்தின் மீது பிரகடனப்படுத்த வேண்டும். பிரதமருக்காக ஜெபியுங்கள். அரசாங்க வங்கி மற்றும் நிதி அமைச்சில் பெலனுள்ள ஆளுகை மற்றும் திட்டங்களை தெளிவாக போடக்கூடிய ஞானம் ஆகியவற்றிற்காக ஜெபியுங்கள்.

எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக **கிறிஸ்துவை** கொடாவிற்குள் **வரவேற்றல்!**

**ஜெப குறிப்புகள் :**

* பேராசை, பொருளாசை, பெருமை மற்றும் தேசத்திலுள்ள தேவனுடைய ஆசீர்வாதங்கள் மீதுள்ள நன்றி கெட்ட தன்மை ஆகியவைகளை விட்டு மனந்திரும்புதல்.

* பொருளாதாரத்தில் விசுவாசிகள் ஆசீர்வாதமாக இருந்து, கிறிஸ்தவர்கள் தெய்வீக விதிமுறைகள் மூலம் மற்றவர்களை பொருளாதார ரீதியாக ஆசீர்வதிக்க, பொருளாதார நெருக்கடியிலுள்ள மற்றவர்களுக்கு இரக்கம் காட்டி உதவி செய்திட வேண்டும்.

* வர்த்தகம், செயல்திட்டம், தலைமைத்துவ நடைமுறை மற்றும் தொழில் சார்ந்த செயல்பாடுகள் ஆகியவற்றில் காணப்படும் அநீதிகள் சரி செய்யப்பட வேண்டும்.

* உள்ளூர் மற்றும் வெளியூர் ஏழைகளுக்காக கொடுப்பது தொழிற்சாலை கலாச்சாரமாக மாறட்டும். நீதி 19:7 ஏழைக்கு இரங்குகிறான் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்று சொல்கிறது. என்ன ஒரு பாக்கியம்!

**குறிப்பு**

நாள் 18
25 ஆகஸ்ட்
புதன்

# சமூக நியாயத்திற்கான ஓர் அழைப்பு

கடந்த 18 டிசம்பர் 2009ல் சன்வே கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற அரசாங்கத்தின் மாற்றத்தை கொண்டு வரும் நிகழ்ச்சியில், சுமார் 44,000 குடும்பங்கள் மிக மோசமான வறுமை கோட்டிற்கு கீழான வருமானத்தை பெறுகிறார்கள் என பிரதம துறை அமைச்சர் டத்தோ இட்ரிஸ் ஜாலா கூறினார். 9வது மலேசியா திட்டத்தின் இடைகால ஆய்வின்படி தீபகற்பத்தில் RM 720.00 க்கு குறைவாகவும் மற்றும் RM 960.00 , சபா மற்றம் சரவாக்கில் RM 380.00 வருமானத்தை உடையவர்கள் ஏழைஉ குடும்பமாக கணிக்கப்பட்டுள்ளனர். மிக ஏழ்மையிலுள்ள 10 சதவீதத்தினர், வெறும் 1.7% பொருளாதார வருமானத்தை கொண்டுள்ளதாகவும், 10 சதவீத பெரிய பணக்காரர்கள் 38.4% வருமானத்தில் வாழ்வதாக சிலர் கூறுகின்றனர்.

இந்த சாதாரண ஆய்வு ஏழை மற்றும் பணக்காரர்கள் மத்தியில் உள்ள பெரிய வருமான வித்தியாசத்தை வெளிப்படுத்தியுள்ளது. இந்த சமூக அநியாயம் ஏழ்மையை ஒழிக்கும் அரசாங்க திட்டத்திற்கு புறம்பாக இருக்கிறது. அரசாங்கம் (NKRA) உள்ள பலவீனங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. சபைகளிலிருந்து நமக்கு மேலும் ஈடுபாடுகள் தேவை, குறிப்பாக இளைய தலைமுறையினரிடமிருந்து ஈடுபாடு தேவை. ஆனால் நமது வாலிபர்கள், எந்த வயதினராக இருந்தாலும், அவர்கள் தேசத்திற்காக கூப்பு மற்றும் ஒளியாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகமூட்ட வேண்டும். தேசத்திற்கான ஒளியாக, ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் விலக்கப்பட்டவர்களுக்காக இக்காரியத்தில் ஈடுபட நமக்கு ஒரு பொறுப்பு உண்டு.

தியானம் : மீகா 6:8, ஏசா 1:17 வசனங்களின்படி தேவன் உங்கள் இருதயத்தில் உணர்த்துகிறது என்ன? ஏழை மற்றும் ஒதுக்கப்பட்டவர்கள் எதிரான வேற்றுமை மற்றும் அக்கறையின்மையை அறிக்கையிடுவோம். தேவன் நம்மை அன்பு மற்றும் மனதுருக்கத்தினால் நிரப்பும்படி கேட்போம்.

**தேசம் :** சமூதாய சீர்கேடுகள் நமது அயலார் மற்றும் குடியேறிகள் மத்தியில் அதிகரித்து வருகிறது. வன்முறை போதைப் பொருள் மற்றும் மற்ற சீர்கேடுகள் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் தேவனுடைய வல்லமையான சந்திப்பு வரவேண்டும். கிறிஸ்துவோடு வல்லமையான இயற்கைக்கு அப்பாற்பட்ட சந்திப்பிற்காக ஜெபியுங்கள்.

அவருடைய மகிமை, வல்லமை, நியாயம் மற்றும் நீதியை வெளிப்படுத்திட **கிறிஸ்துவை** பேராக்கில் **வரவேற்க வேண்டும்.**

## ஜெப குறிப்புகள் :

* இளை தலைமுறையினர் இவற்றை குறித்து நல்நோக்கத்துடன், ஏழைகள் மற்றும் ஒதுக்கப்பட்டவர்களை குறித்து மனதுருக்கம் மற்றும் இரக்கமுள்ளவர்களால் செயலாற்ற வேண்டும்.
* சபை தாரளமாக செல்வத்தை தேவனுடைய ராஜ்யத்தை இடங்களில் விவாரிக்கம் செய்யவும், ஆவிக்குரிய மற்றும் பொருளாதார தேவையுள்ளோருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்.
* உள்ளூர் சபைகள் ஏழை சமூதாயத்தில் நல்விளைவை கொண்டுவர சிறந்த சமூதாய சேவைகள். திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். அறுவடையின் கர்த்தர் இப்பகுதிகளுக்கு வேலையாட்களை ஏற்படுத்தி, நுகங்கள் உடைத்து மக்களை எல்லா கட்டுகளிலிருந்து விடுதலையாக்க வேண்டும்.
* வறுமையை ஒழிக்க அரசாங்கம் சிறந்த திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். சமூக பிரச்சனைகளான போதைப்பொருள் சிறார் கொடுமை, கற்பழிப்பு, வன்முறை, குண்டர் கும்பல் சூதாட்டம் போன்றவற்றை தடுக்க சட்டத்துறையில் ஞானம் காணப்பட வேண்டும். எல்லா அரசாங்கத்துறையிலும் காணப்படும் சீர்கேடுகள் வெளியரங்கமாகி ஒழிக்கப்பட வேண்டும்.

குறிப்பு

# பொது நன்மை மற்றும் நியாயம்

நாள் 19
26 ஆகஸ்ட்
வியாழன்

இஸ்லாமிய அதிகாரிகள் பெண் பிள்ளைகளை, ஆண் பிள்ளைகளை போல நடந்து கொள்ள தடைவிதித்திருக்கிறார்கள் மற்றும் முஸ்லீம்கள் யோகாவை செய்யவும் தடை செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வருடத்தின் தொடக்கத்தில், மது அருந்தியதற்காக ஒரு இஸ்லாமிய பெண்ணுக்கு பிரம்படி கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சமீப காலத்தில், ஒழுக்கமற்ற நடவடிக்கைகளை ஒழுக்க இஸ்லாமிய அதிகாரிகள் மிஞ்சிய முயற்சிகளை எடுத்தபோது, இளம் நிபுணத்துவ குழுவினர்களின் எதிர்ப்புக்கு ஆளாயினர். இந்த நிபுணத்துவ குழுவினர் இம்மாதிரியான செயல்கள் வளரும் சமரச இஸ்லாமிய நாடு என்னும் மலேசியாவின் நற்பெயரை கெடுக்கும் என சுட்டிக் காட்டியுள்ளனர்.

நியாயம் மற்றும் எல்லோருடைய நலனுக்காக எழும்பி நிற்கும் இந்த நிபுணத்துவ குழுவினருக்காக தேவனிடத்தில் நாம் நன்றி செலுத்த வேண்டும். இந்த குழுக்கள் இன்னும் அதிகமாக நோக்கத்துடனும், உணர்வுடனும் தேசத்தில் காணப்படும் அநீதியை எதிர்த்து நிற்க நாம் அவர்களுக்காக ஜெபிப்போம்

தியானம் ; ஏசா 40:3-5 தம்முயை நோக்கங்களுக்காக வித்தியாசமான மக்கள் குழுக்களை பயன்படுத்திடும் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். கர்த்தர் தமது சபை மட்டுமே பயன்படுத்துவார் என்ற தப்பெண்ணம் அல்லது சிந்தனை தடை இருக்கிறதா? தேசம் மற்றும் மக்களுக்காக தேவன் பயன்படுத்தக்கூடியவர்களை குறித்து நமக்கு பரந்த மனம் மற்றும் சிந்தனையும் இருக்கவேண்டும்.

**தேசம் :** அதிகாரம் மற்றும் அதிகாரத்திலுள்ளவர்களை வசீகரிக்க கிரியை செய்யும் எல்லா மத தீவிரவாதத்திற்கு எதிராக ஜெபியுங்கள். ஷரியா நீதிமன்றம் பொது நீதிமன்றத்தின் அரசியல் சட்டம் மற்றும் கடமையை மதித்து, அதனுடைய தீர்மானங்களில் தலையீடு செய்யாமல் இருக்க வேண்டும்.

அவருடைய ராஜ்யத்தை விரிவாக்கும்படி **கிறிஸ்துவை** வாபுவானில் **வரவேற்றல்.**

**ஜெபகுறிப்புகள் :**

* எல்லோருக்கும் நியாயம் மற்றும் நீதியை குறித்து அக்கறை கொண்டு எழும்புகிற முஸ்லீம்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.
* திருச்சபை தேச நலனுக்காக மனித உரிமை, அரசியல் சட்டம், செயல்திட்டங்கள் மற்றும் மதம் போன்ற காரியங்களில் சமரச குழுவினரோடு இணைந்து செயலாற்ற, திறந்த மனப்பான்மையுடன் இருக்க ஜெபியுங்கள்.
* விசுவாசிகள் உப்பு ஒளியாக தங்கள் வாழ்க்கை முறை மற்றும் மதிப்பீடுகள் மூலம் இந்த சமரச குழுவினரை தொட்டு, அவர்களுடைய இருதயம் சுவிஷேசத்திற்கு திறக்கப்பட ஜெபியுங்கள்.
* தேவ பயம் நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் மீது காணப்பட்டு, அவர்கள் உண்மையுள்ளவர்களாய், மனுஷருக்கு பயப்படாமல், பாரபட்சமின்றி நீதி மற்றும் நியாயத்தை கடைப்பிடிக்க வேண்டும். அதிக கிறிஸ்தவர்கள் நீதித்துறையில் எழுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு**

# கணினி மற்றும் தொடர்புதுறை

முதிய தலைமுறையினர் தொலைக்காட்சியை சுற்றி வளர்ந்தனர், இன்றைய நமது நமது வாலிபர்கள் கணினியில் வளர்க்கப்படுகின்றனர். இந்த உலகளாவிய காரியம் நமது முழு காலச்சாரத்தையும் மாற்றி விட்டது. உலக ஒருங்கிணைப்பால், தகவல்கள் கட்டுப்பாடின்றி அதி சீக்கிரத்தில் பரவுகிறது. இளைய தலைமுறையினர், கணினிகளோடு தங்கள் முழு வாழ்க்கையுடன் இருப்பவர்கள், வியாபாரங்களை சீக்கிரமாகவும் மற்றும் மலிவாகவும் செய்கின்றனர். இந்த வாலிபர்கள் வீடியோ, ஆடியோ மற்றும் எழுதப்பட்டுள்ள வார்த்தையை குறித்து அதிக ஞானமுள்ளவர்களாக, நிறைய கூட்டுறவுகளை விட உலகை மாற்றுவதற்கான அதிக திறனை பெற்றுள்ளனர்.

தியானம் : தானி 12:4, கடைசி நாட்களில் அறிவு பெருகி போகும் என்று சொல்கிறது. கணினி தொடர்புதுறை அறிவை இலவசமாக பெற்றுக் கொள்ளவும் மற்றும் அதை பணக்காரர், ஏழை, இளைஞர் மற்றும் முதியவர்களுக்கும் கிடைக்க வழி செய்கிறது.

**தியானம் :** இரகசிய சபையின் பரிசுத்தவான்கள் 5 வித ஊழிய வரங்களால் பலப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு பட்டணம், கிராமம் மற்றும் சமூதாயத்திலும் தேவனால் ஊக்குவிக்கப்படும் வல்லமையான சபை ஸ்தாபிக்கும் ஸ்தாபனம் உருவாக வேண்டும்.

பாழடைந்த பட்டணங்களை சீரமைப்பு செய்யவும் மற்றும் தேசத்தை சுகமாக்கவும் சூடானில் **கிறிஸ்துவை வரவேற்க வேண்டும்.!**

**ஜெபகுறிப்புகள் :**

* அநேக முறை கணினி தொழில் நூட்பத்தை நாம் தவறாக பயன்படுத்தியதற்காக மன்னிப்பு கேட்போம். நமது துணையை ஏமாற்றுவதற்காகவும், நமது அன்பானவர்களோடு நேரத்தை செலவழிப்பதை தடுக்கவும், சொத்துக்களை திருடவும், ஆபாச படங்களை பார்க்கவும் மற்றும் தீமையான அறிக்கைகளை பரப்பவும் நாம் அதை பயன்படுத்தியிருக்கலாம்.
* ஞானம் மற்றும் காலத்தை புரிந்து கொள்ள ஜெபிப்போம். கணினியை கொண்டு தலைமுறையினரையும், தேசத்தையும் தொடுவதற்கான வழிமுறைகளுக்காக ஜெபியுங்கள்.
* சபை புள்ளி விபர காலத்தில் இருக்கும் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து, அவர்களை வழிநடத்த பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். போதகர்கள் தலைவ-ர்கள் பகுத்தறிவோடு, அவருடைய இராஜ்ய விரிவாக்கத்திற்கு புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்து செல்ல வேண்டும்.
* தகவல், கலாச்சாரம், தொடர்பு மற்றும் கலையின் அமைச்சர் டத்தோ ஸ்ரீ டாக்டர் ரயிஸ் யாத்திம் அவர்கள், கர்த்தரை தனிப்பட்ட ரீதியில் அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.

குறிப்பு

# தொலை தொடர்பு மற்றும் கலை

நாள் 21
28 ஆகஸ்ட்
சனி

1962ல் இன்று மற்ற காரணங்களை விட திரைப்படங்கள் அதிக குற்றச் செயல்களுக்கு தூண்டுதல் அளித்து, இளையோர் சீர்கேட்டிற்கு வழிவகுக்கிறது. என ஒரு புலணாய்வுத்துறை இயக்குனர் சொன்னார். அவருடைய அறிக்கை எவ்வளவு உண்மையாக இருக்கிறது. தொலை தொடர்வு நல்லது அல்லது கெட்ட பாதிப்புகளுக்கு வழி வகுக்ககூடிய வல்லமையான ஆயுதமாக இருக்கிறது இன்று அதிகமான புறம்பான உடலுறவு, பில்லி சூனியம், மூர்க்கம், கொலை, கொடூரம், அதிகமான விவகாரத்துகள் போன்றவைகளை காண்கின்றோம். மிக சிலர் செய்தி தாட்களை வாசிக்கிறன்றனர். ஆனால் பெரும்பாலானோர் தங்கள் தனிப்பட்ட கணினியில் செய்திகளை புகுத்துகின்றனர். நவீன தொழில்நூட்பத்தின் மூலம், தொலை தொடர்பு மற்றும் கலை துறை தனது ஒருங்கிணைப்பை கொண்டுள்ளது. பாரம்பரிய சமூக வாழ்க்கை மறைந்து கொண்டு வருகிறது. இந்த பெரிய மாற்றத்தின் நடுவே திருச்சபை தொலை தொடர்பு மற்றும் கலை துறையை தொட ஆரம்பித்துள்ளதை காணும்போது, தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். நாம் எதிர்நோக்கும் சவால்கள் என்னவென்றால், சத்தியம் மற்றும் தெய்வீக ஆவிக்குரிய மதிப்பீடுகளை உருவாக்கி, காணாமல் போன தலைமுறையை தொடவும் அதே நேரத்தில் திறனுடன் கவர்ச்சியான வகையில் கையாள நமக்கு தெரிய வேண்டும்.

**தியானம் :** நீதி 4:24-26 உங்கள் நேரத்தை எப்படி செலவளிக்கிறீர்கள்? நீங்கள் பார்க்கின்றதை குறித்து கரிசனையுள்ளவர்களாக இருக்கிறீர்களா? ஆவிக்குரிய ரீதியில் அது உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கிறதா? கர்த்தரிடம் அதை ஒப்புக் கொடுங்கள்.

**தேசம் :** அரசியல் தலைவர்கள் அரசியல் லாபத்திற்காக பில்லி சூனியத்தை நாடும் அதிகாரத்திலுள்ள தலைவர்களுக்காக கர்த்தரிடம் மன்னிப்பு கேட்போம். விசுவாசிகள் எல்லா மேலான இடங்களில் வைக்கப்பட்டு, உப்பு மற்றும் ஒளியாக இருக்க வேண்டும். கிறிஸ்துவுடன் தெய்வீக சந்திப்பு ஏற்பட ஜெபியுங்கள்.

எல்லா மக்கள் இனமும் அவரை ஆராதிக்க **கிறிஸ்துவை** இந்தோனேசியாவிற்கு **வரவேற்றல்.**

**ஜெப குறிப்புகள் :**

* கர்த்தர் செய்யும் புதிய காரியங்களை ஆழமாக புரிந்து கொள்ள அவரிடயே கேளுங்கள். பல தொலை தொடர்பு வாய்ப்புகள் இருந்தாலும், நம்முடைய கண்களும், காதுகளும் அவரையே நோக்கியிருக்க ஜெபியுங்கள்.
* விசுவாசிகள் தேவன் தங்களுக்கு தந்த திறன்களையும், தாலந்துகளையும் கொண்டு தொலைந்த தலைமுறையினரை திரைப்படங்கள், இசை, விளையாட்டு, கேலிக்கைகள் மூலம் தொட வேண்டும். இந்த வரங்கள் எல்லா மொழிகளிலும் செயலாற்ற வேண்டும். ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ் மற்றும் மற்றவை.
* புதிய தொலை தொடர்பு நூட்பங்களை உருவாக்கக்கூடிய புதிய ரக விசுவாசிகளை தேவன் எழுப்பும்படிக்கு ஜெபியுங்கள். அவர்கள் திறமை, சூழ்நிலைகேற்ப மற்றும் எல்லா புதிய தொடர்பு சாதனைகளை கொண்டு தீர்க்கதரிசன செய்தியை தேசத்திற்கு கொண்டு வர வேண்டும்.
* அரசாங்கம் தொடர்ந்து திறமை மற்றும் தொலை தொடர்பு கலையில் இலவச பேச்சு விபரங்களுக்கு உதவி செய்ய வேண்டும். தேவன் தொலை கலையில் செய்ய நினைக்கும் காரியங்களுக்கு யாரும் தடை செய்யப்படாமல் இருக்க ஜெபியுங்கள்.

**குறிப்பு**

நாள் 22
29 ஆகஸ்ட்
ஞாயிறு

# முதியவர்களை பராமரித்தல்

மஞ்சிட் ஒரு அரசாங்க குமாஸ்தவாக பணியாற்றினார் ஓய்வு பெறும் நாளை வாஞ்சையுடன் எதிர்பார்த்தார் ஆனால் அது வந்தபோது, நாட்கள் மாதங்களாயின, பிறகு வருடங்கள் ஆயின. தனது சேம நிதிப்பணம் குறைந்து கொண்டு போவதை கண்டு அவர் கவலைப்பட்டார். அவருடைய பிள்ளைகள் அவரை ஒரு விடுதியில் வைக்க சிந்தித்து கொண்டிருந்தார்கள். இன்று மூத்த குடிமக்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். 65 வயதுள்ள ஓய்வு பெற்றவர்கள் தங்களுடைய சேமி நிதியில் இருந்து 70%, 10 வருடங்களுக்கு உள்ளாக செலவளித்துள்ளனர் என ஆய்வு காட்டுகிறது. பலர் தங்கள் நேரத்தை உணவகங்கள், பங்கு சந்தைகளில் போன்றவற்றில் கவலையுடன் முறுமுறுத்து, சீன நாட்டு பெண்களுடன் உறவாடி கழிக்கின்றனர். மஞ்சிட் போன்ற சிலர் கர்த்தரை நோக்கி, “நான் இப்போது வயதாகி போனேன், என்னை கைவிடாதிரும்’ சங் 71:18 என கதறி கொண்டிருக்கின்றனர்

தியானம் : சங்கீதம் 71:9, 16-18 நம் வயதான பெற்றோர்களை குறித்து நமக்கிருக்கும் பொறுப்புகளை நாம் ஏற்க மறுத்திருந்தால், அவர்களுடைய தேவையை அறியாமல் மற்றும் அவர்களுடன் பொறுமை-யற்று இருந்திருப்போமானால், கர்த்தரிடம் மன்னிப்பு கேட்போம்.

**செயல்பாடு :** ஒரு முதியவரை உற்சாகப்படுத்தம்படிக்கு ஒரு கார்டை எழுதி அனுப்புங்கள்.

**தேசம் :** எல்லா மாநிலங்களிலும் சபை சமூதாய திட்டங்கள் பாகுபாடின்றி நமது அயலார் மற்றும் எல்லா இனத்தாரையும் ஆசீர்வதிக்க வேண்டும். அவருடைய அன்பு மற்றும் நற்கிரியைகள் மூலம், சபையானது அவர்களுக்கு அவரை காட்டும் வெளிச்சமாக இருக்கட்டும்.

அநீதி மற்றும் இருளை அவருடைய வல்லமை கவிழ்த்து போட.
**கிறிஸ்துவை ஈரானுக்கு வரவேற்றல்.**

**ஜெப குறிப்புகள் :**

* குடும்ப பிணைப்பை இணைத்து, ஒப்புக் கொடுத்து, பொறுப்பை ஏற்று, பிள்ளைகள் தங்கள் வயதான பெற்றோர்களை பராமரிக்கும்படி கர்த்தரிடம் ஜெபியுங்கள்.
* சபையில் எல்லா மூத்த குடிமக்களையும் ஆசீர்வதித்து, அவர்கள் தொடர்ந்து தேவனை சேவித்து மற்றும் இளைய தலைமுறையினருக்கு கற்றுக் தந்து, வழிகாட்டி மற்றும் ஆலோசனை கொடுத்து தங்கள் எஞ்சிய நாட்களை கழிக்க ஜெபியுங்கள்.
* சபை மூத்த குடிமக்களை பல்வேறு சபை ஊழியங்களில் பயிற்றுவித்து, கவலையிலும் சந்தேகத்திலும், பயத்திலும், நோக்கமில்லாமலும் மற்றும் தனிமையிலும் வாடும் மற்ற ஓய்வு பெற்றவர்களை தொடுவதற்கு ஜெபியுங்கள்.
* வயதானவர்கள் ஊனமுற்றவர்களுக்கான சிறந்த அரசாங்க திட்டங்கள் அமல்படுத்தப்பட வேண்டும். அதிகரித்து வரும் சுகதார செலவு, உணவு மூத்த குடிகளுக்கான வீடுகள், செலவுகளை குறைக்க, நல்ல விடுதிகளை ஏற்படுத்தி மற்றும் தேசம் கட்டுதலில் மூத்த குடிகளையும் பயன்படுத்திடக்கூடிய வழிகளை காண வேண்டும்.

குறிப்பு

# மௌனமான அழுகை

நாள் 23
30 ஆகஸ்ட்
திங்கள்

ஆதியிலே சர்ப்பமானது ஸ்தீரியின் வித்தை அழிக்க வகை தேடியபோது, யுத்தம் ஆரம்பமானது. இன்று உலக ரீதியாக, கோடிக்கணக்கான குற்றமற்ற உயிர்கள் வெளிச்சத்தை காணும் முன் அழிக்கப்படுகிறன்றனர். ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கை சிறந்த மதிப்பும், அவருடைய பார்வையில் விலையேறப்பெற்றதாக இருப்பதால், ஸ்தீரியின் வித்து, காயப்படும்போது. தேவனுடைய இருதயம் காயப்படுகிறது. ஒவ்வொரு ஜீவனும் விலையேறப்பெற்றது. மற்றும் தேவனுக்கு முக்கியமானது. ஆகவே சபை இந்த உதவியற்ற மற்றும் குரலற்ற தலைமுறையினருக்கு, தேவனுடைய குரலாக இருக்க வேண்டும். அவர்களுடைய மௌனமான அழுகை, இன்று நமது அழுகையாக மாறட்டும்.

தியானம் ; ஆதி 1:26-27 சங் 139:13-18 தேவனுடைய இருதயத்தை உடைக்கும் காரியங்களை கவனித்து சிந்தியுங்கள். உங்களையும் மற்றும் எல்லா மக்கள் இனங்களையும் நேசிக்கிற தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். காரணம் நாம் அழகாகவும், அற்புதமாகவும் அவருடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம்.

**தேசம் :** உள்ளூர் சபையின் உதவியை நாடுகிற இரகசிய விசுவாசிகள் மற்றும் உதவி கிடைக்காமல் இருப்பவர்கள், தொடர்ந்து கிறிஸ்துவில் நம்பிக்கையாய் இருக்க ஜெபியுங்கள் உள்ளூர் சபை விசுவாசிகளுக்கு துணிந்து உதவிட மற்றும் விசுவாசிகள் கிறிஸ்துவுக்கு புதிய ஜீவன் பெற்றவர்களுக்கு உற்சாகம் மற்றும் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

அவருடைய வல்லமை மற்றும் மகிமையை வெளிப்படுத்திட **கிறிஸ்துவை** பாலஸ்தீனுக்குள் **வரவேற்றல்.!**

**ஜெபகுறிப்புகள் :**

* குற்றமற்ற இரத்தத்தை சிந்திய நம் தேச மக்களின் சார்பில் நின்று மனந்திரும்பி, அவருடைய மன்னிப்பையும், இந்த துக்ககரமான பாவத்தை செய்தவர்கள் இரக்கம் பெற ஜெபிப்போம். எல்லா மனித வாழ்வின் தூய்மை மற்றும் மேன்மையை குறித்த ஆழமான புரிந்துணர்வை தேவனிடம் கேட்போம் குரலற்றவர்களுக்கு குரலாக சபைகள் எழும்ப வேண்டும்.
* கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் வாலிபர்களுக்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அதிகமான வாலிபர்கள் திருமணத்திற்கு வெளியே உடலுறவு பாவத்திற்கு எதிராக உறுதியாக நிற்க வேண்டும். வாலிபர்கள் மத்தியில் தெய்வீக மதிப்பீடுகள் மற்றும் பரிசுத்தமும் காணப்பட வேண்டும்.
* நம் தேசத்தில் கருகலைப்பை சட்டத்திற்கு விரோதமாக செய்யும் எல்லா கிளினிக்களும் மூடப்படவேண்டும்.

குறிப்பு

நாள் 24
31 ஆகஸ்ட்
செவ்வாய்

# மெர்டேக்கா! மெர்டேக்கா!

வருடங்களின் வழி வித்தியாசமான நேரங்களில் மற்றும் காலங்களில் பிரச்சனைகள் மத்தியிலும் கூட, நாம் அதிக சமாதானம், அமைதி, வளர்ச்சி மற்றும் செழிப்பை அனுபவத்திருக்கிறோம் திருச்சபை ஜெபித்திடும்போது, கர்த்தர் நம்மை ஒரு தேசமாக காப்பாற்றினார். இதற்கு முன் இல்லாத அளவில் தேவன் தம் மக்களை திறப்பின் வாசலில் நிற்க எழுப்பியுள்ளதை கண்டு அவருக்கு மெய்யாகவே நன்றி செலுத்துகிறோம். கடந்த இருபதாண்டுகளாக, ஜெப இயக்கங்கள் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருப்பதை காண்கிறோம். இது வெறும் ஆரம்பம் மட்டுமே. இந்த தேசம் தம்முடைய மகிமை மற்றும் மாட்சிமையை எல்லா மக்கள் மீதும், தேசங்கள் மீது பிரதிபலிக்கும்படி உருவாக்க தேவன் வாஞ்சையாயிருக்கிறார். நாம் தொடர்ந்து மன்றாடி, "மெர்டேக்காவை" எல்லா பகுதிகளிலும் பிரகடனப்படுத்துவோம்.



**பிரகடனம் :**

* நம் தேசம் மற்றும் அரசாங்கத்தின் மீது **மெர்டேக்கா!** ஏசா 60:1-3 தேசத்தின் மீது பறைசாற்றி, எல்லா ஆவிக்குரிய இருளிலிருந்து தேசத்தை விடுவித்தல். ஒளியின் பிதா தம்முடைய நித்திய ஒளியை நமது தேசம் மற்றும் எல்லா மக்கள் இனங்கள் மீது பிரகாசிப்பிக்கும்படி அவரை கேட்போம்.

* சபையின் மீது **மெர்டேக்கா!** சபை உலக தூய்மைக் கேட்டிலிருந்து விடுப்பட்டு, தன்னை தனியாக பிரித்தெடுத்து கொள்ள வேண்டும். ஒரு ஒன்றுப்பட்ட தலைமுறை சேனைகளாக, எல்லா பகுதிகளிலும் அவருடைய சாட்சிகளாக எழும்ப வேண்டும்.

* பொருளாதார அமைப்புகள் மீது **மெர்டேக்கா!** ஏசாயா 60:5-7 பறைசாற்றி இப்பகுதி பேராசை பொருளாசை மற்றும் பதுக்குதல் காரியங்களிலிருந்து விடுதலை பெற வேண்டும் மிகுதியான செல்வங்கள் தேசம் மற்றும் உலக்திற்கான சுவிசேஷ ஊழியத்திற்கென பயன்படுத்தப்பட வேண்டும்.

* கல்வியின் மீது **மெர்டேக்கா!** போலியான கொள்கைகள் உலகளாவிய மனித கருத்துகளிலிருந்து விடுப்பட வேண்டும். இளைஞர்கள் தலைமைத்துவத்தில் ஞானம், அறிவு மற்றும் அவருடைய அழைப்பை சேவிக்ககூடிய குணம் பெற்றவர்களாக எழும்பிட வேண்டும்.

* தொலை தொடர்பு மீது **மெர்டேக்கா!** குழப்பம் சீர்கேடு, சத்தியத்தை திருப்புகிற பொல்லாதவனுடைய செயலிருந்து விடுதலை பெற வேண்டும். ஒரு புதிய இளைய தலைமுறையினர் எழும்பி, தங்கள் திறமையான சிந்தனையால், தொலைந்து போனவர்களை சுவி ஷேசம் மூலம் சந்திக்கும்படி அவர்கள் இந்த பகுதியை சுதந்தரித்து கொள்ள வேண்டும்.

* தொடர்பு சாதனம் மற்றும் கலை மீது **மெர்டேக்கா!** விதைக்கப்படுகிற எல்லா தவறான மதிப்பீடுகளிலிருந்து விடுதலை பெற வேண்டும். தெய்வீக கிறிஸ்தவ ஆண்களும், பெண்களும் எழும்பி, இந்த வாசலை சுதந்தரிக்கும்படி, தெய்வீக மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகளை காண்பவர்களுக்குள் புகுந்த வேண்டும்.

* நம் தேசத்திலிருக்கும் பெரும்பான்மையினர் மீது **மெர்டேக்கா!** தடையில்லாமல் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் சுதந்திரம்.

# பலவீனர் & உதவியற்றவர்கள்



அம்மாவுடைய நண்பர் தன் வீட்டில் தங்குவது டவினுக்கு பிடிக்கவில்லை. அம்மா வீட்டில் இல்லையென்றால், அவன் எரிச்சலாகி கடுமையாக நடந்து கொள்வான். டவினுடைய கழுத்தை பிடித்து, அவனுடைய சிகரெட்டை கையில் வைத்து சுடுவான் டவின் வலியினால் துடிதுடித்து கத்திக் கொண்டிருக்கையில், கைகளிலும், கால்களிலும் மற்றும் உள்ளிடங்களிலும் சிரித்துக் கொண்டே சுடுவான். அவன் தொடர்ந்து தண்டனை மற்றும் அடிகளால் தன்னை மிரட்டுவதால், டவின் அதற்கு பயந்து தன் அம்மாவிடம் சொல்ல மாட்டான். அனுதினமும் பிள்ளைகள் கெடுக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, புதர்கள், பாலங்கள் அடியில், குளங்கள், ஏரிகள் என கொலை செய்யப்பட்டு கிடப்பதை அனுதினமும் கேட்கிறோம். இம்மாதிரியான உடைந்த பின்னனி உள்ளவர்கள் பயத்துடனும், வெறுப்புடனும் வாழ்கிறார்கள். 2007ல் தினமும் 8 மலேசியர்கள் கற்பழிக்கப்படுகிறார்கள் என அறிக்கை கூறுகிறது. இது எண்ணற்ற பிள்ளைகள் மற்றும் சித்திரைவாதைக்குள்ளானவர்களை உள்ளடக்கவில்லை. நிறைய இம்மாதிரியான காரியங்களில், பிள்ளைகள் தங்களை தாக்கும் நபர்களை அறிந்திருப்பார்கள். பிள்ளைகள் பலவீனமும், உதவியற்றவர்களாக இருப்பதால் தாங்கள் நம்புகிற நபர்களால் தாக்கப்படுகிறார்கள்.

**தியானம் :** மத் 19:14, சங்கீதம் 127:3-4 பிள்ளைகள் அவருடைய ஈவு, நமது பெருமை சந்தோஷம் மற்றும் அவர்கள் நமக்கு தந்துள்ள பலன் என்பதை மறந்து போனதினால், தேவனிடம் மன்னிப்பு கேட்போம். இயேசுவிடம் அவர்கள் வருவதை தடுத்ததற்காக மன்னிப்பு கேட்டு, இனம் மற்றும் மத பாகுபாடின்றி அவர்களை பாதுகாத்து, வழி நடத்தி, போதித்து, அன்பு காட்டிட வேண்டும்.

**செயல் :** இன்று ஒரு பிள்ளைக்கு ஜெபியுங்கள்.

**கவனம் :** வெளிநாட்டில் பயிலும் நமது அயலார்கள் தேவனை அறிந்து கிறஸ்துவை ஏற்றுக் கொள் ஜெபியுங்கள்.

தேசத்தை சீர்ப்படுத்தி,
மக்கள் அவரில்
நம்பிக்கையை காணும்படி
**கிறிஸ்துவை** ஈராக்கிற்குள்
**வரவேற்றல்!**

## ஜெபகுறிப்புகள் :

* ஒவ்வொரு சபையிலிருந்து சிறுவர் ஊழியங்கள், தங்கள் சமூதாயத்திலுள்ள பிள்ளைகளுக்கு ஒளி வீடாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ பிள்ளைகள் எழும்பி வார்த்தையினால் கட்டப்பட்டு, தேவையிலுள்ள தங்கள் நண்பர்களை தொட்டு, ஆறுதல் படுத்தவேண்டும்.
* பள்ளிகள், பாலர் பள்ளிகள், துயூஷன் சென்டர்கள், அங்காடிகள் ஆகியவற்றில் விழிப்பு மற்றும் பாதுகாப்பு. பொதுவிடங்களில் பெரியவர்களோடு காணப்படாத பிள்ளைகளை கவனமாக கண்காணித்து, எச்சரிக்கையுடன் பாதுகாக்க வேண்டும்.
* கெட்ட நோக்கத்துடன் பிள்ளைகளை சித்திரவாதை செய்பவர்கள் மற்றும் அவர்களை கடத்துபவர்கள் பிடிபட வேண்டும் எல்லா உபத்திரவங்களிலிருந்து, சரீரம், உணர்ச்சி மற்றும் ஆவிக்குரிய வாதைகளிலிருந்து பிள்ளைகள் குணப்பட்டு, விடுதலையை ஜெபியுங்கள்.
* எல்லா மாநிலங்களிலுள்ள சபைகள் ஒன்று கூடி, சமூதாயத் திட்டங்களை உருவாக்கி, உதவியற்ற மற்றும் தகப்பனற்ற பிள்ளைகளுக்கு பராமரிப்பை வழங்க வேண்டும்.

### குறிப்பு

# தலைமுறையை மீட்டெடுத்தல்

மற்றவர்கள் தூங்கும்போது, மாட் ரெம்பிட் தங்கள் நாளை தொடங்குகின்றனர். அனுதின கூடுதலுக்காக மாட் ஆர்வமுடன் எதிர்பார்த்திருப்பான். கும்பலிலுள்ள அவனுடைய நண்பர்கள் தான் அவனுடைய வாழ்க்கை, அவர்களுடன் இருக்கும்போது அவன் தைரியத்தை உணருகிறான். போதைப் பொருள் அவனை உற்சாகமூட்டுகிறது. வீட்டை விட்டு தூரமாகி, அங்காடிகளில் சுற்றிக் கொண்டு, பிரயோஜனமற்றவன் என அழைக்கப்படுகிறான். அவன் வாழ்க்கை ஒரு மோட்டார் வண்டி, எப்பொழுதும் நகர்ந்து கொண்டு, வேகமாக போகும். வேகமாக போகையில், அவன் மெதுவாக சென்று யோசிக்க இயலாது. குழுவினர் செய்வதை பின்பற்றுவான். சில நாட்கள் அவர்கள் வாலிப பெண்கள், கர்ப்பிணி பெண்களிடமிருந்து வழிபறி செய்வார்கள், மற்ற நேரங்களில் கார் ஜன்னல்களை உடைத்து கைப்பை, கணினி ஆகியவற்றை திருடுவார்கள். பொதுச் சொத்தை உடைத்து தங்கள் மோட்டார் வண்டியில் ஆபத்தான வேடிக்கைகளை செய்வார்கள்.

இந்த வாலிபர்கள் மற்றும் மற்றவர்கள் தங்கள் பெற்றோர்கள், அதிகாரங்கள் மற்றும் தேவனோடு ஒப்புரவாக வேண்டும். பெற்றோர்கள், அதிகாரங்கள் மற்றும் அரசாங்கம் அவர்களை கண்டு, சீர்த்திருத்த வேண்டும்.

**தியானம் :** மல்கிய 2:1-8 ஒரு தேசமாக நாம் செய்ய வேண்டிய ஆசாரிய உடன்படிக்கை கடமையில் நாம் தவறியதற்காக தேவனிடமிருந்து மன்னிப்பு கேட்டு, மல்கிய 2:5 பிரகாரம், இந்த காணாமல் போன வாலிபர்களுக்கு ஜீவன், சமாதானம், மனதுருக்கம் மற்றும் உண்மையான போதனையையும் கொண்டு வர வேண்டும்.

**செயல் :** காரில் அல்லது LRT மூலம் உங்கள் ஜெப பங்காளியுடன் பயணம் செய்து ஜீவனை கூறி, தொலைந்து போன வாலிபர்கள் பிதாவிடம் மனந்திரும்பிட, அவர்களை ஆசீர்வதியுங்கள். கிறிஸ்துவுடன். ஒரு வல்லமையான சந்திப்பு ஏற்பட ஜெபியுங்கள். ஏசா 62:10-12 பறைசாற்றி திறந்த இரட்சிப்பின் நெடுஞ்சாலை மற்றும் அவர்கள் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் என்றழைக்கப்பட ஜெபியுங்கள்!

மக்கள் மத்தியில் தெய்வீக சந்திப்பு ஏற்பட **கிறிஸ்துவை** துணிசாவில் **வரவேற்றல்**

## ஜெப குறிப்புகள் :

